பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 07 ஞாயிற்றுக்கிழமை (22-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:207

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமர்-ஜனாதிபதி நேரில் ஆராய்வு

## ஜனாதிபதி மாளிகையில் இரண்டு மணிநேர சந்திப்பு



கொழும்பு,ஜூன்22


**சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள நிலையில் வடக்கு - கிழக்குக் கான இடைக்கால நிர்வாக சபை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேற்றுமுன்தினம் சந்தித்து ஆராய்ந்துள் ளனர். ஜனாதிபதி மாளிகையில் இந்த திடீர் சந்திப்பு இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. சுமார் இரண்டு மணிநேரம் இந்தவிடயம் குறித்து இருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.**

**சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை பற்றியும் அவற்றை நீக்குவது தொடர்பாகவும் இருவரும் ஆராய்ந்ததாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.**

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வா கம் தொடர்பான யோசனைகளை அரசு இன்னும் இறுதிசெய்யவில்லை என்றும் - இடைக்கால நிர்வாகம் குறித்த முழுமையான வரைபு தயாரிக்கப்பட் டதும் விடுதலைப் புலிகளின் பரிசீல னைக்கு அது அனுப்பிவைக்கப்படும் என்றும் - பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்த தாகவும் ஹரீம் பீரிஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்

(14ஆம் பக்கம் பார்க்க)



### பிரதமர் ரணில் நாடு திரும்பியவுடன்

## இடைக்கால நிர்வாகம் பற்றிய வரைபுடன் அடுத்த வாரம் வன்னிக்கு அரச குழு!

### பேர்னாட் குணதிலக தகவல்

கொழும்பு,ஜூன்22

பிரிட்டன் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடுதிரும்பியதும் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் குறித்த அரசின் புதிய வரைபுடன் அரச குழுவொன்று அடுத்த வாரம் வன்னிக்குச் செல்ல வுள்ளது.

சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக இத்தகவலை தெரிவித்தார்.

கொழும்பில் செய்தி ஊடகம் ஒன் றுக்கு தகவல் தெரிவிக்கையில் இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கிற்கான இடைக் கால நிர்வாகம் தொடர்பான வரைபு தயாரிக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்றுவருகின்றன. பிரதமர் நாடு திரும்பியதும் அந்தவரைபை அவர் பரிசீலனை செய்வார்.

அதன்பின்னர் அந்த வரைபுடன் அரச குழுவொன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளு டன் கலந்துரையாடும்.

இதைத்தொடர்ந்து நோர்வே சமா

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனுக்கு ரணில் 3நாள் திடீர் விஜயம்

கொழும்பு,ஜூன்22

பிரிட்டனுக்கு மூன்று நாள் அவ சர விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை புறப்படுகின்றார்.

இந்த விஜயத்தின் போது பிரிட் டிஷ் பிரதமர் ரொனி பிளயர் உட் பட பல உயர்மட்டத் தலைவர்களு டன் பேச்சுக்களை நடத்தும் பிரதமர் ரணில், எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு திரும்புகின்றார்.

பிரதமருடன் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் பிரிட்டன் செல்கின்றார். தற்சமயம் அமெரிக்காவில் தங்கியுள்ள அமைச் சர் மிலிந்த மொறகொட லண்டன் வந்து பிரதமருடன் இணைந்து பேச் சுக்களில் ஈடுபடுவார்.

இந்த விஜயத்தின்போது லண்ட னில் தங்கியுள்ள விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசு வதற்கும் பிரதமர் தலைமையிலான குழு முயற்சி செய்யும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட் டது (ம-3)

## கண்காணிப்புக் குழு உறுப்பினர் எண்ணிக்கை 56ஆக உயர்வு

கொழும்பு,ஜூன்22

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 56ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடற்கண்காணிப்பில் ஈடுபட போதி யளவு ஆளணி இல்லாததால், கண் காணிப்புக் குழுவின் உறுப்பினர்க ளின் பலத்தை அதிகரிக்கும்படி பாது காப்பு அமைச்சுக் கோரியிருந்தது.

இதைத் தொடர்ந்து தற்சமயம் 47 உறுப்பினர்களுடன் செயற்படும் தமது குழுவின் எண்ணிக்கையை 56 ஆக உயர்த்த கண்காணிப்புக் குழு முடிவு செய்துள்ளது. இந்த முடிவின் படி புதிதாக 9 கண்காணிப்பாளர்கள் கொழும்பு வந்துள்ளனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

கடற்பரப்பில் மோதல்கள் ஏற்படு வதைத் தவிர்க்க வசதியாக கடற் படையின் 'சயுரா', 'சுரநிமால' ஆகிய கட்டளைக் கப்பல்களிலும் பீரங்கி பொருத்திய படகுகளிலும் கண் காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் பயணஞ்செய்ய ஏற்பாடு செய்யும்படி பாதுகாப்பு அமைச்சு கண்காணிப்புக் குழுவை கோரவிருக்கிறது. (ம-3)

## பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்க எழுச்சியுடன் மக்கள் தயாராகின்றனர்

### சகல ஏற்பாடுகளும் துரிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

"நாங்கள் எங்கள் வீடுகளுக்கு செல் வதற்காக இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்கு செல்லுங்கள்" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 27 ஆம தகதி நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் எழுச்சி பூர்வமாக பங் கேற்க மக்கள் தயாராகிவருகின்றனர்.

கிராம மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் எழுச்சி நிகழ்வுகளிலும் வீதி நாடகங்களிலும் பெரும் எண்ணிக்கை யானவர்கள் உணர்வுபூர்வமாக பங் கேற்று வருகின்றனர்.

குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் செல்லும் 600இற்கும் மேற்பட்ட மாண வர்கள் மக்களுடன் கலந்துரையாடி வருகின்றனர். பொங்குதமிழுக்கு தமது பூரண பங்களிப்பை வழங்குவதாக அவர்களிடம் மக்கள் உறுதி கூறினர்.

பொங்கு தமிழ் நிகழ்வுகள் தொடர் பாக பல்கலைக்கழக சமூகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

வன்முறைகள் எதுவும் இன்றி மக் களின் உணர்வுகளை வெளிப்படுத்து வதற்காக இப்பொங்குதமிழ் நிகழ்வு தினத்தன்று, காலையில் பாடசாலை மட்டத்தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடத்தப்படவிருக்கின்றன. அதில் அதிபர், ஆசிரியர்களது உரை மற்றும் மாணவர்களது கவிதைகள்,

(14ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு, கரடியனாறு தேனகம் விருந்தினர் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சமூகப் பெண்கள் மேம்பாட்டு அமைப்புக்கும் மட்டு. - அம்பாறை மாவட்ட மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரேமினி ஆகியோரும் கலந்துகொண்டனர். கூட்டத்தில் கருணா அம்மான் உரையாற்றுவதையும் அதில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## படையினர் அச்சுறுத்தல் பற்றி கண்காணிப்புக் குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம்,ஜூன்22

வடமராட்சி மாவீரர் துயிலும் இல் லத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.45 மணியளவில் துப்புரவுப் பணி யில் ஈடுபட்டிருந்தவர்களை ஆயுதம் தரித்த இராணுவத்தினர் அச்சுறுத்தி யுள்ளனர் என விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விடம் முறையிட்டுள்ளனர்.

படையினரின் இச்செயலானது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்றும் புலிகள் தமது முறைப்பாட் டில் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 20ஆம் திகதி அன்று காலை 9.45மணியளவில், வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளரும் பொது மக்களும் துப்பரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அச்சம யம் ஆயுதந்தரித்த எட்டு இராணுவ வீரர்கள், நான்கு 'பீல்பைக்கு'களில் (FIELD BIKE) அச்சுறுத்தும் வகை யில் வாசலில் மிக வேகமாக வந்து நின்றனர். கைச்சைகைகளால் அச்சு றுத்தி, அசிங்கமாக காறித்துப்பி விட்டு வாகனங்களை இரைச்சலுடன் மீண்டும் கிளப்பியபோது, ஓர் இரா

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அரச மருத்துவர் வேலைநிறுத்தம் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டது

## யாழ். ஆஸ்பத்திரியில் சேவைகள் வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்22

கடந்த சில தினங்களாக அரச மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று இடைநிறுத்தப்பட்டது. குடாநாட்டு அரச வைத்தியசாலைகளிலும் சிகிச்சைகள் வழமைக்குத் திரும்பின.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் உட்பட சகல பிரிவுகளும் நேற்று மீண்டும் வழமைபோல் இயங்கின.

வைத்தியர்களால் முன்வைக்கப்பட்ட சம்பள முரண்பாட்டுக் கோரிக்கைகள் சுகாதார அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தமக்கு பக்ஸ் மூலம் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டதாகவும் அதனையடுத்து நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் தமது போராட்டத்தை இடைநிறுத்தி சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் சங்க செயலாளர் குமரவேள் உதயனுக்குத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் இந்த சிபார்சுகளை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் அமைச்சரவை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அன்றையதினம் காலை 8 மணியிலிருந்து மீண்டும் தமது வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க வைத்தியர்களின் பொதுவான சம்பளப் பிரச்சினைகளை ஏற்றுள்ளதாகத் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்திருக்கும் சுகாதார அமைச்சு அந்த அறிக்கையில் வடக்கு - கிழக்கு வைத்தியர்களுக்கு வழங்க வேண்டிய விசேட கொடுப்பனவு விவகாரம் குறித்து எதனையும் பிரஸ்தாபித்திருக்கவில்லை எனவும் டாக்டர் குமரவேள் சுட்டிக்காட்டினார்.

(ம-4-8-15-139)

# பருத்தித்துறை துறைமுக ஊழியர் நேற்று பணிக்குச் செல்லவில்லை

## படையினரின் கெடுபிடிகள் காரணம்

வடமராட்சி,ஜூன்22

பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்றுக்காலை படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருந்தன. இதனால், தமது துறைமுகத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து சீனி ஏற்றி வந்த 'லிவர்பூல்' என்ற கப்பலில் பொருள் இறக்குவதற்குச் சென்ற துறைமுக ஊழியர்கள் படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளானதாகவும் -

அதன் காரணமாக அவர்கள் வேலை செய்யாது திரும்பியுள்ளதாகவும் -

அந்தச சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல் தமது தொழிலை மேற்கொள்ளச் சென்ற தொழிலாளர்கள் படையினரின் சோதனை முடிந்த பின்னர் முட்பற்றைகள் நிறைந்த இடத்தில் உட்கார வைக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான சூழல் நிலவும் காலத்திலும் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால் தமது தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ம-70-173)

# ஒரு வழிப்பாதை விதிமுறையை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை

யாழ்.கஸ்தூரியார் வீதியில் ஒரு வழிப்பாதையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிக்குள் விதிகளை மீறி நடப்போர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

வீதி ஒழுங்கை சிவர நடைமுறைப்படுத்தும் நோக்கில், இனிமேல் ஒரு வழிப்பாதை நடைமுறைகள் மிக இறுக்கமாகப் பேணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகளும் சைக்கிளோட்டிகளும் ஒருவழிப்பாதை விதிமுறைகளை மோசமாக மீறிவருகின்றனர். இதனால், விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாகவே ஒருவழிப்பாதை விதிமுறையை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சட்டம், ஒழுங்கை மீறும் வாகனச் சாரதிகள், சைக்கிளோட்டிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ம-3-ரி)

## தென்னாபிரிக்கா உதவி

இலங்கையில் மனித உரிமைகள் பேணல் விவகாரங்களை விருத்தி செய்வதற்கு தென்னாபிரிக்கா உதவ முன்வந்துள்ளது.

தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், இது தொடர்பாக ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு விடுத்துள்ள அழைப்பை ஏற்று இங்கு வரும் தென்னாபிரிக்க அதிகாரி, மனித உரிமைகளை விருத்திசெய்வது பற்றி இங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

(ம-5)

# குருநகர் சீநோர் தொழிற்சாலை இந்து கலாசார அமைச்சின் கீழ்

யாழ்ப்பாணம்,ஜூன்,22

குருநகரில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தை (சீநோர்) நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சு பொறுப்பேற்றுள்ளது.

புனர்வாழ்வு, அகதிகள் மீளக் குடியமர்வு அமைச்சின் கீழ் இயங்கி வந்த இந்த நிறுவனத்தை பிரதமர் அலுவலகத்தின் பேரில் இந்து கலாசார அமைச்சு பொறுப்பேற்றுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சீநோர் என்ற பெயரில் இயங்கிய இந்த நிறுவனம் பிளாஸ்டிக் வள்ளங்கள், வலைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்துவந்தது.

இந்த நிறுவனம் தற்சமயம் வடகடல் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

காரைநகரில் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சீநோர் நிறுவனத்தின் அலுவலகம் அமைந்துள்ள காரணத்தால், அந்த நிறுவனம் குருநகரில் சிறிது காலம் இயங்கி வந்தது. ஆனால், கடந்த கால போர் அனர்த்தங்களால் குருநகரில் இயங்கி வந்த அலுவலகமும் செயலிழந்தது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து குடாக்கடலூடாக வந்த பொதுமக்களை வைத்து பராமரிக்கும் இடைத்தங்கல் முகாமாகவும் அது இருந்து வந்தது.

தற்போது அங்கு மீண்டும் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ம-3)

# கவுணாவத்தைப் பொங்கலில் 800 ஆட்டுக் கடாக்கள் பலி!

சண்டிலிப்பாய்,ஜூன்22

பிரசித்தபெற்ற கீரிமலை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த வேள்வி மற்றும் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நேற்று ஆலயத்திற்கு சமீபத்தில் உள்ள மைதானம் ஒன்றில் நடைபெற்ற வேள்வியின் போது 800இற்கும் அதிகமான ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டன. 500இற்கும் மேற்பட்ட கோழிகளும் பலியிடப்பட்டன.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளதால் இவ்வாலயத்துக்கு பொதுமக்கள் செல்வதற்கு பாதுகாப்புப் படையினர் இம்முறையும் அனுமதியளிக்கவில்லை. இதனால், கடந்த ஆண்டில் நடைபெற்றது போல ஆலயத்திற்கு ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள மைதானம் ஒன்றில் வேள்வி, பொங்கல் என்பன நடத்தப்பட்டன.

வேள்வியில் நேற்று அதிகாலை முதல் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர். காலை 7.30 மணிக்கு ஆட்டுக்கடாக்கள் பலியிடும் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து கோழிகளும் பலியிடப்பட்டன.

நூற்றுக்கணக்கானோர் பொங்கல் பொங்கியும் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றினார்கள்.

பலியிடப்படுவதற்கான ஆட்டுக்கடாக்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரப் பெட்டிகளிலும் லான்ட்மாஸ்டர்களில் நிறுத்தப்பட்டு கொண்டுவரப்பட்டதைக் காணமுடிந்தது.

கீரிமலை, கவுணாவத்தை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற பலரும் இந்த உற்சவத்தில் கலந்துகொண்டு ஆட்டுக்கடாக்களைப் பலியிட்டனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் பலியிடப்பட்ட ஆட்டுக்கடாக்களைக கொள்வனவு செய்வதற்காக பல்வேறு இடங்களிலிருந்தும் இப்பகுதிக்கு வந்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பலியிடப்பட்ட நன்கு வளர்ச்சியடைந்த சில பெரிய ஆட்டுக்கடாக்கள் 30ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரை(ஒன்று) விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

ஆலயத்தில் பொங்கல் நடத்துவதற்கு ஆலய பரிபாலகர் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சேந்தாங்குளம் ஊடாக செல்ல படையினர் திடீர் அனுமதி வழங்கினர்.

அவர்கள் அங்கு பொங்கல் நடத்தியுள்ளனர்.

(ம-3-135)

## வடமராட்சி கிழக்கில் படையினரால் கம்பிவேலி அமைப்பு

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதி கடற்கரைப் பகுதியில் கம்பிவேலி அமைத்து புதிய காவலரண்களை படையினர் ஏற்படுத்திவருவதால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

கடற்றொழிலாளர்களை கடற்கரைக்குச் செல்லவிடாது தடுக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

(ம-70)

# ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்று வவுனியா விஜயம்

வவுனியா,ஜூன்22

வவுனியாவில் புதிதாக படையினரால் அமைக்கப்படும் காவலரண்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்று நேரில் ஆராய்ந்தார்.

நிதியமைச்சின் செயலாளர் சரித்தரத்வத்த சகிதம் வவுனியா வந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ ஓமந்தை, கொக்குவெளி ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்தார்.

புதிதாக அமைக்கப்படும் காவலரண்கள் மற்றும் பழைய காவலரண்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து படை அதிகாரிகளுடன் செயலர் கலந்துரையாடினார்.

(ம-3)

# அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆராய தேசிய மீளாய்வு சபை அமைப்பு

கொழும்பு,ஜூன்22

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை சுதந்திரமாக ஆராய்வதற்காக தேசிய மீளாய்வு ஆலோசனைச் சபை ஒன்றை நிதி அமைச்சு நியமித்துள்ளது.

திறைசேரி செயலாளர் சரித்தரத்வத்த இக்குழுவுக்கென 6 உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

டி.எஸ்.விஜயசிங்க, சுஜீவா முதலிகே, மேஜர் ஜெனரல் ஹரி டிசில்வா, யூ.டி.கனகசபை, ஆர்.சுந்தரலிங்கம், ஏ.விக்கிரமநாயக்க ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் விரயங்கள், மோசடிகள், வீண் செலவுகள் குறித்து ஆராய்ந்து விவரமான அறிக்கையைத் தயாரிப்பதும் -

அத்தகைய நிலையை நீக்குவதற்கான ஆலோசனைகளை வழங்குவதும் - இக்குழுவின் முக்கிய பணியாக அமையும்.

அரச நிறுவனங்களில் பணிபுரியும் வேலையாள்களின் பிரச்சினைகள், பொருள் வழங்குநர்களின் பிரச்சினைகள், அலுவலகச் சூழல் ஆகியன குறித்தும் இக்குழு ஆராயவிருக்கின்றது.

இந்தக் குழுவின் ஆலோசனையைப் பெற்று தொழில் முயற்சிகளுக்கான அலுவலகம் ஒன்றை அமைக்கவும் நிதி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இக்குழு இனங்காணும் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ம-3)

# சுதந்திர வர்த்தகப் பிரதேசம் பற்றி 5 நாடுகளின் நிபுணர்கள் ஆராய்வு

## கொழும்பில் இரு நாள் மாநாடு

கொழும்பு,ஜூன்,22

தெற்காசிய மற்றும் தென்கிழக்காசியாவை உள்ளடக்கிய பிராந்திய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக 5 நாடுகளின் பொருளாதார நிபுணர்கள் நாளை திங்கட்கிழமை கொழும்பில் கூடி ஆராய இருக்கின்றனர்.

பங்காளதேஷ், மியான்மர், இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைக் கொண்ட பொருளாதார ஆணைக்குழுவைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்களே இப்பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தகப் பிரதேசம் அமைப்பது தொடர்பாக கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இரண்டு நாள்களுக்கு நடைபெறவுள்ள இந்தப் பொருளாதார நிபுணர்களின் மாநாடு பிராந்திய வர்த்தகப் பிரதேசத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

இதற்கான உடன்படிக்கை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் கைச்சாத்திடப்படவுள்ளது.

(ம-5)

## சாவகச்சேரிக்கு வன்னியிலிருந்து மணல்

சாவகச்சேரி,ஜூன்22

தென்மராட்சியில் மணலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதையடுத்து பொதுமக்கள் தமது கட்டடத்தேவைகளுக்கு வன்னியிலிருந்து ஆற்றுமணலைத் தருவித்துக் கட்டடங்களை அமைத்து வருகின்றனர்.

(எ-31)

## செல்லிடப்பேசிகள் எடுத்துவந்த தமிழர் கைது!

கொழும்பு,ஜூன்22

செல்லிடப்பேசிகள் கொண்ட பொதி ஒன்றைக் கடத்திக்கொண்டு வர முயற்சிசெய்த நபர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்று சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

துபாயில் இருந்து கொழும்புக்கு வந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் ஒன்றில் சந்தேக நபர் இந்த கையடக்கத் தொலைபேசிகள் கொண்ட பொதியை கொண்டுவந்ததாகவும் -

கொழும்பில் வசிக்கும் தமிழர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கத் தணைக்களம் தெரிவித்துள்ளது.

(ம-5)

## யுனிசெவ் உதவியுடன்

# குடாநாட்டில் பல இடங்களிலும் மிதிவெடி விழிப்புணர்வுத் திட்டம்

## சர்வோதயம் நடத்துகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்22

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் நிறுவனம் குடாநாட்டில் பரவலாக மிதிவெடி விழிப்புணர்வு செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன், மிதிவெடியில் சிக்கி ஊனமுற்றவர்களுக்கு சுயதொழில் முயற்சி ஊக்குவிப்புக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் கிராமங்களுக்கு சென்று அங்கு மக்கள் மத்தியில் மிதிவெடி தொடர்பான விளக்கங்கள, அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

அததுடன், மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடனாக தலா !2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவருகின்றது.

இக்கடன் 6 மாத காலத்தின் பின்னர் தவணைமுறையில் அறவிடப்பட்டு சுழற்சி முறையில் ஏனையவர்களுக்கும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.(எ-4)

# சட்டவிரோத குடியேறிகள் இருநூறு பேர் டுனீசிய கடலில் படகு கவிழ்ந்து மரணம்?

## இத்தாலி செல்லும் வழியில் சம்பவம்

டுனீசியா,ஜூன்22

**ஆபிரிக்காவைச் சேர்ந்த சட்ட விரோத குடியேறிகள் சுமார் 200 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று டுனீசியா கடற் பகுதியில் கவிழ்ந்தது. அதிலிருந்தவர்களை மீட்கும் பணி முழு வீச்சில் நடைபெறுகின்றது. சுமார் 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.**

வடக்கு ஆபிரிக்கா மற்றும் மத்திய ஆபிரிக்கா பகுதிகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகள் இத்தாலி செல்வதற்காகப் படகில் சென்று கொண்டிருந்த வேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

கடலில் மூழ்கிய படகிலிருந்தவர்களை மீட்கும் பணியில் டுனீசிய கரையோரக் காவல் படையினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதுவரை 41பேர் உயிருடன் மீட்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. 20 பேரின் சடலங்களையும் மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர்.

சுமார் 250 பேர் வரை படகில் இருந்தனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

மிக அதிகமானவர்கள் ஏற்றப்பட்டிருந்ததாலேயே படகு கவிழ்ந்தது என்று தகவல்கள் தெரிவித்தன.

படகு கடலில் மூழ்குவதை மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்த மீனவர்களே கண்டு அதுபற்றி உடனடியாக கரையோர காவல் படையினருக்கு அறிவித்தனர்.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தோர் இவ்வாறு சட்டவிரோதமாக இத்தாலிக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பயண முகவர்களால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



படகிலிருந்து மீட்கப்பட்ட குடியேற்றவாசிகள்



சீனாவில் பரவி வந்த சார்ஸ் முற்றிலுமாக ஒழிந்துவிட்டது. இனியார் வேண்டுமானாலும் சீனாவுக்கு தாராளமாக செல்லலாம் என்று உலக சுகாதார அமைப்பும் கூறிவிட்டது.

பீஜிங் நகரில் 'சார்ஸ்' நோய்க்கு சிகிச்சை முடித்துக்கொண்ட கடைசி வெற்றிக்குழுவினர் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் வெளியே வந்த காட்சி. (ஐ)

## 2005 ஆம் ஆண்டில் சுதந்திர பலஸ்தீனம்

### அமெரிக்காவின் திட்டம் நிறைவேறுமா?

நியூயோர்க்,ஜூன்22

பலஸ்தீனத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எகிப்தைக் கோரியுள்ளார்.

மத்தியகிழக்குப் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தும் விடயத்தில் உதவுவதற்கென அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீஸ்ஸாரைஸை அப்பிராந்தியத்துக்கு அனுப்பிவைக்கப் போவதாகவும் ஜனாதிபதி புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சமாதான திட்டத்தின்படி 2005 ஆம் ஆண்டில் சுதந்திர பலஸ்தீனம் உருவாக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவின் இந்தத் திட்டம் வெற்றிபெறுவதற்கு பலஸ்தீனப் பகுதிகளில் வன்செயல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாகவே ஜோர்ஜ் புஷ் எகிப்தின் உதவியைக் கோரி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-12)

## நக்கீரன் கோபால் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் தடை

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நக்கீரன் கோபால் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நீதிபதிகள் ஆர்.சி.லஹோதி, பிரஜேஷ்குமார் இது தொடர்பான ஆணையைக் கடந்த திங்கட்கிழமை பிறப்பித்தனர்.

பொடா சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் படி செல்லுபடியாகாது என்று கூறி ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் விசாரணை முடிந்து தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. இந்தத் தீர்ப்பு வெளியாகி உச்ச நீதிமன்றம் உரிய ஆணையைப் பிறப்பிக்கும் வரை கோபால் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

## பாரீஸில் தீக்குளித்த ஈரானியப் பெண் சாவு

பாரீஸ்,ஜூன்22

பிரான்ஸில் தஞ்சமடைந்திருந்த ஈரானைச் சேர்ந்த இடதுசாரிகளை பிரெஞ்சு அரசு கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது தீக்குளித்த பெண் செடிகே மோகசேரி வியாழக்கிழமை உயிரிழந்தார்.

பிரெஞ்சு உள்துறை அமைச்சகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் புதன்கிழமை நடந்தது. தீக்குளிப்பில் படுகாயமடைந்த செடிகே மோகசேரி பாரீஸில் இராணுவ மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைப் பெற்று வந்தார். பாரீஸில் அதே தினத்தன்று தீ குளித்த மேலும் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர். இதில் ஒருவர் பெண். ரோமில் பிரெஞ்சு தூதரகம் முன்பாக ஈரானியர் இருவர் வியாழக்கிழமை தீக்குளித்தனர். காலிலும், மார்பிலும் பலத்த காயமடைந்த அவர்கள் உயிருக்கு ஆபத்து இல்லை என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது. (ஐ)

## ஈராக்கில் பெருமளவு யுரேனியம் பொதுமக்களின் கைகளில் சிக்கியது?

நியூயோர்க்,ஜூன்22

அண்மையில் ஈராக்கில் தாங்கள் கைப்பற்றிய யுரேனியம் ஈராக்கில் ருவெய்தா என்ற இடத்திலிருந்து கொள்ளையிடப்பட்டது என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அணுக் கதிர்வீச்சு தொடர்பான அவதானிப்பு அமைப்பினர் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். ஈராக் யுத்தத்தின்போது காணாமற்போயிருந்த அணுப்பொருள்களில் அனேகமானவை திரும்பக் கிடைத்துவிட்டன என்று சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவித்திருந்தது. ஆயினும், யுரேனியம் உட்பட 'ருவெய்தா' நகரிலிருந்த அணுப் பொருள்கள் கிராமவாசிகளால் கொள்ளையிடப்பட்டிருப்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

ருவெய்தா நகரில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கிருந்த அணுசக்தி பொருள்கள் பரல்களில் அடைக்கப்பட்டு களவாடப்பட்டன என்றும் -

அவை பின்னர் பரல் ஒன்று 2 பவுண் வீதம் கொள்ளையர்களால் பொதுமக்களுக்கு விற்கப்பட்டன என்றும் - கூறப்படுகிறது.

அணுசக்தி பொருள்கள் அடைக்கப்பட்ட பரல்கள் பின்னர் பொதுமக்களால் குடிதண்ணீர் கொள்கலன்களாகப் பயன்படுத்தப்பட்டன எனவும் கூறப்படுகிறது.

1.8 மெற்றிக் தொன் 'மஞ்சள் கேக்' என்ற அணுசக்தி பொருளும், சுமார் 500 தொன் வரையான சுத்திகரிக்கப்படாத யுரேனியமும் ருவெய்தா நகரிலிருந்து ஈராக்கியர்கள் வெளியேறிய பின்னர் கொள்ளையிடப்பட்டன. கொள்கலன்களில் இருந்த யுரேனியத்தை தரையில் புதைத்து விட்டு அவை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### அமெரிக்க ஆயுத சோதனை தோல்வி

நியூயோர்க்,ஜூன்22

கடலில் இருந்து செலுத்தப்படும் அமெரிக்க ஏவுகணைப் பரிசோதனையொன்று தோல்வியில் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் இருந்து தம்மைத் தாக்க வரும் ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கும் வல்லமை கொண்ட ஏவுகணையே அமெரிக்கக் கடற்படையினரால் பரீட்சார்த்தமாக செலுத்தப்பட்ட போது அது குறித்த இலக்கைத்தாக்கத் தவறிவிட்டது.

அமெரிக்கா மிக நீண்டகாலமாகவே இவ்வாறானதோர் ஆயுதத்தினை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-12)

### கப்பல் மோதல்: 23 பேர் மரணம்!

பெய்ஜிங்,ஜூன்22

தென்மேற்கு சீனாவில் சரக்குக் கப்பலுடன் மோதி பயணிகள் கப்பல் கவிழ்ந்ததில் 23 பயணிகள் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சாங்கிப் பகுதியில் யாங்சி ஆற்றில் இந்த விபத்து நடந்தது. கப்பல் கவிழ்ந்ததில் 3 பயணிகள் இறந்ததாக வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் மாணவர்கள் உட்பட 35 பேர் சென்றனர். லோங்கியோ அருகே சரக்குக் கப்பல் மீது மோதியதில் பயணிகள் கப்பல் கவிழ்ந்தது. அப்போது 12 பேர் மட்டுமே மீட்கப்பட்டனர். மற்றவர்கள் கதி தெரியவில்லை. மீட்புப் பணி தொடர்கிறது என 'சீனாடெய்லி' பத்திரிகை தெரிவித்தது. (ஐ)

### வெடி விபத்தில் 15 பேர் பலி!

துருக்கியின் கேய்சேரி நகரில் உள்ள ஒரு பள்ளியில் திடீர் என்று பயங்கரச் சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது.

இதில் அந்தப் பள்ளிக்கூடத்தின் கழிவறை மற்றும் சமையல் கூடம் ஆகியவை இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 15 குழந்தைகள் பலியாகிவிட்டனர்.

50இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். 'காஸ்' குழாயில் ஏற்பட்ட கசிவே இந்த வெடி விபத்துக்குக் காரணம். (ஐ)



இந்தப்பெண் கம்பிக் கூண்டுக்குள் வைத்திருக்கும் மிருகங்கள் ஒருவித பூனைகள். இந்த சிவெட் பூனைகள் தைவானில் செல்லப்பிராணிகளாகவும் வளர்க்கிறார்கள். இறைச்சிக்காகவும் வளர்க்கிறார்கள். மிருதுவான இதன் ரோமங்களைக் கொண்டு கலைப் பொருள்களைத் தயாரிக்கலாம். தைவான் விவசாயிகள் இதை அதிக அளவில் வளர்த்து அதை விற்று பிழைப்பு நடத்தி வந்தனர். ஆனால், இந்தப் பூனைகளால் 'சார்ஸ்' போன்ற ஒருவித வைரஸ் நோய் பரவும் என்று டாக்டர்கள் கூறிவிட்டதால் இந்தப் பூனைகளை வளர்க்க தைவான் அரசு தடை விதித்து விட்டது. பிழைப்புக்கு வழியில்லாத விவசாயிகள் அந்தப் பூனைகளை எடுத்துக்கொண்டு தைபே நகரில் உள்ள விவசாயத்துறை அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி. (ஐ)

# KUPID FORT கியுபிட் போட் Capsules (இது ஒரு இந்தியன் தயாரிப்பு)



பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை. சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ் காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத்தன்மையைப் போக்க.
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு.
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த.
- 100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

## நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணத்திற்கான விநியோக முகவர்:

## ஜெகன் பார்மஸி

(18780) 462B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222-3191


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டு, கொழும்பு 15இல் உள்ள
சென். ஜேம்ஸ் மாடியில் வசித்து வரும்
மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன்

## இராசரத்தினம் சாந்தன்

கொழும்பு மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 22.05.2003 அன்று சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளமையைப் பாராட்டுவதோடு **திரு.சாந்தன்** மேலும் பல புகழ்பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

**க.இதயம்,**
கலைமதி விளையாட்டுத்துறை ஆலோசகர்.

(சி-28479)

# யாழ். மாநகர சபைக்கு பார ஊர்தி மூலம் தார் ஏற்றித் தருவதற்கான கேள்வி அறிவித்தல் - 2003

மாநகர சபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சப்புகஸ்கந்த கிளை கொழுமபில் இருந்து பார ஊர்தி மூலம் ஏற்றிவந்து யாழ். மாநகர சபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம். விண்ணப்பங்கள் யாவும் மாநகர சபை ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் 17.07.2003 ஆம் திகதி அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கூறுவிலைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| விவரம் | ஒரு தார் பரலுக்கு ஏற்றுக் கூலி |
|---|---|
| 1. 140 லீற்றர் கொண்ட தார் பரல் (1477) | --------------- |
| 2. 152 லீற்றர் கொண்ட தார் பரல் | --------------- |
| 3. 200 லீற்றர் கொண்ட தார் பரல் | --------------- |

சேவையிலுள்ள
**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். திகதி 10.06.2003

(c/28473)

# ஓராண்டு நினைவஞ்சலி

மனம் மகிழ 1974 - 09 - 01



மனம் நெகிழ 2002 - 07 - 04

## இதயசிவாசனம் இதயசிவானந்தம் *(இதயன்)*

(ஏழாலை. மத்தி, ஏழாலை)
திதி: 22.06.2003 நவமி

*அழுதவிழி காயவில்லை*
*ஆண்டு ஒன்று ஆகியதோ – அப்பா*
*உற்றார். உறவினர் ஊர்கூடி இருந்தாலும்*
*உற்றதுணை நீங்களில்லை – இதயா*
*ஒரே ஒரு பிஞ்சுப் பாலகனைப் பாதி வயதினில்*
*பரிதவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?*
*மாயவாழ்க்கை இதுவெனக் காட்டி*
*மாயமாய் மறைந்திட்டாலும் – இதயன்*
*என்றும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தெல்லிப்பழை கிழக்கு, கரவெட்டி.* (19216)
மனைவி - **பிரமிளா,**
மகன் - **நிலக்ஷன்.**


# எம்மவரால் எம்மவருக்காய் எமது மண்ணில் இணையம் (INTERNET) புரட்சி!!

**www.yourname.com / www.yourcompany.com / www.yourinstitute.com / www.anything.com**

* சர்வதேசமெங்கும் உங்களைப்பற்றி உங்கள் நிறுவனம் பற்றி பிரபல்யப்படுத்த வேண்டுமா?
ஆம் என்றால், ஒரேவழி உங்களுக்கான இணையத்தளத்தினை (Website) இணையத்தில் ஏற்படுத்துவதுதான்!
* நிறைய செலவாகும் எனக் கருதுகின்றீர்களா? கவலையை விடுங்கள்.
  * வருடமொன்றுக்கு செலவாகும் ஆகக்குறைந்த தொகை 6000/= மட்டும்
  * முதல்தடவை மாத்திரம் தளத்தினை நிறுவ செலவாகும் ஆகக்குறைந்த தொகை 10,000/= மட்டும்.
* கிடைக்கும் நன்மைகள் எவை?
  * 5 மின்னஞ்சல் முகவரிகள் (E-mail) உடன் அழகான இணையத்தளம்!
  * நாளின் 24 மணி நேரமும் வருடத்தின் 365 நாட்களும் உங்கள் தளம் உலக மக்களுடன் பேசிக்கொண்டிருக்கும்.
  * சர்வதேச பிரபல்யம் – சர்வதேச தொடர்புகள்.
  * உங்கள் செயற்பாடுகள் உலகமயமாக்கப்படுதல்.
* இதற்கு உங்களுக்கு ஒரு கணினி (Computer) அவசியமா?
இல்லை! உங்களுக்காக அமெரிக்காவில் / அவுஸ்ரேலியாவில் கணினிகள் இயங்கும்.
* இப்போது என்ன செய்யவேண்டும்?
அழையுங்கள்: 077 – 7563213

மிகச்சிறிய நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்குமான இணையத்தளங்களுக்குரிய (Static sites)
ஆகக்குறைந்த செலவாகும் தொகை 3000/=(வருடமொன்றுக்கு)
முதல் தடவைமட்டும் செலவாகும் ஆகக்குறைந்த தொகை 7000/=

எமது சேவைகள்:
*Domain Registration 1,500/- Per Year
*Dynamic Hosting 5,000/- Per Year
*Static Hosting 2,000/- Per Year
*System Development

**It Development Services**
**Webtamilan.com**
*Web : www.webtamilan.com *Email:info@webtamilan.com
**Hotline: 077-7563213**


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 19 - 02 - 1956



இறப்பு 23 - 05 - 2003

## திரு. சண்முகம் சிவகுருநாதன் *(சிவாஜி)*

(கமலன்வளவு, மானிப்பாய்), 60, பிரசர் அவனியு, தெகிவளை.

அமரரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்தி வழங்கியவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்.*
*ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!*

*திருமதி சிவகுருநாதன் தனசக்தி*
(மனைவி),
*மாருதன், மயூரன்*
(மகன்மார் - கனடா)
*60, பிரசர் அவனியு, தெகிவளை.*

*திரு. தா. சிவராஜா*
(இலங்கை வங்கி, மானிப்பாய்),
*திருமதி சிவராஜா கிருபாசக்தி*
(யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

(19316)

## உதயன்

# மண்ணுக்காக மற்றொரு போராட்டம்!

பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படக்கூடிய பேராபத்துக்கள் குறித்து கிராம ரீதியாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பிரசார நடவடிக்கைகள் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் கூட்டாக இந்தப் பணியை முன்னெடுத்திருக்கின்றன.

கடந்த காலங்களில் தமிழர் பிரதேசங்களில் நீடித்து வந்த போர் காரணமாக போரும் அதனால் விளைந்த நேரடிப் பாதிப்புகளும்தான் முதன்மைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், போரின் விளைவுகளால் சுற்றுச் சூழலில் ஏற்பட்ட பாதிப்புகளும் மனித நடவடிக்கைகளால் சூழல் சமநிலையில் ஏற்பட்ட தாக்கங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டதில்லை. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், புனர்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புக்கள் சூழல் பாதிப்புக்கள் பற்றிக் கவலை கொண்டிருந்த போதிலும், அது தொடர்பாகத் தீவிர கவனம் செலுத்தவும், அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படவும் அவற்றினால் முடியாமல் இருந்தது.

தமிழர் பிரதேசங்களில் பயன்தரு மரங்கள் வகைதொகையின்றி அழிக்கப்படுவதையும், மணல் போன்ற வளங்கள் கட்டுப்பாடின்றி அகழப்படுவதையும் தடுப்பதில் இந்த நிறுவனங்கள் தீவிர பங்காற்றியிருந்தன. இதன்மூலம் சுற்றுச்சூழல் பேணுவதில் அவை கணிசமான பங்களிப்பை நல்கின எனலாம்.

ஆனால், நவீன விஞ்ஞான வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் காரணமாக ஏற்படுகின்ற சுற்றுச்சூழல் பாதிப்புகள் இன்று உலகளாவிய தேசியப் பிரச்சினைகளாக மாறிவருகின்றன. இப்போதைக்கு மனிதன் உயிர் வாழ்வதற்கான ஒரே கிரகமாக இருக்கும் பூமிப் பந்தை அடுத்தடுத்த தலைமுறையும் வாழ்வதற்கான இடமாக விட்டுவைக்கமுடியுமா என்ற கேள்வி இன்றுள்ள ஒவ்வொரு மனிதன் முன்னும் கேட்கப்படுகின்றது.

நவீன கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பங்கள் காரணமாக மனிதன் இந்த உலகையே தனது சொர்க்கமாக மாற்றிவிட்டிருக்கின்றான்.

இயற்கையோடு ஒன்றிய வாழ்வில் இருந்து முற்றாக விலகி விஞ்ஞான பூர்வமான வாழ்க்கைச் சூழலுக்குள் மனிதன் சிக்கிக் கொண்டுள்ளான்.

இயற்கைக்கு முரணான எல்லா நடவடிக்கைகளும் பூமியில் மனித குலத்துக்குப் பாதிப்புக்களை, பேரழிவுகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன.

காற்றும், நிலமும், நீரும், இன்று இயற்கையான அமைப்பில் இல்லை. அவை மனித நடவடிக்கைகளால் தம் புனிதம் இழந்து மாசுபட்டுப்போயிருக்கின்றன.

விவசாயத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட தமிழர் பிரதேசங்களின் மண் வளம் மிக வேகமாகச் சிதைவடைந்து வருகின்றது. அந்தவகையில், மண்ணை மாசுபட வைக்கும் கழிவுப் பொருள்களில் பிரதானமானவையாக பிளாஸ்ரிக் கழிவுகள் உள்ளன.

கடதாசிப் பைகளில் பொருள்களை வாங்கிய யுகம் மாறிவிட்டது. இப்போது இருப்பது 'ஷொப்பிங் பாக்' யுகம். இயற்கையாக அழிவடையாத பிளாஸ்ரிப் பொருள் கழிவுகளில் பிரதான பங்கை வகிப்பது இந்த 'ஷொப்பிங் பாக்'. இன்று எதற்கெடுத்தாலும் 'ஷொப்பிங் பாக்'தான் என்ற நிலை.

ஒவ்வொரு வீடுகளிலும் தினசரி எஞ்சும் கழிவுப் பொருள்களைக் கணக்கிட்டால் அதில் அரைவாசிக்கும் கூடிய பங்கை இந்த 'ஷொப்பிங் பாக்'குகளும் அவை போன்ற பிளாஸ்ரிக் கழிவுகளுந்தான் நிறைக்கின்றன.

தரையில் மண்வெட்டி கொண்டு எங்கு கிளறினாலும் மண்ணுக்குள் இருந்து முதலில் தலைகாட்டுவது ஒரு பிளாஸ்ரிக் கழிவாகத்தான் இருக்கும்.

நிலத்தடி நீரை அடிப்படையாகக் கொண்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தின் மண் இவ்வாறு பிளாஸ்ரிக் பொருள்களால் மாசடைந்து வருவது நீண்டகாலப்போக்கில் பேராபத்துக்களை உண்டாக்கப்போவது திண்ணம்.

மழைநீர் வடிந்து சுண்ணாம்புக்கற்பாறை இடுக்குகளை தடையின்றி சென்றடைய வேண்டுமாயின் மண் அதன் இயற்கை அமைப்பு சிதைவடையாத நிலையில் இருக்கவேண்டும். ஆனால், யாழ். குடாநாட்டை எடுத்துக்கொண்டால் இன்று மழைநீரில் கால்வாசிப் பங்குகூட தரைக்கீழ் நீராகச் சேமிக்கப்படுவதில்லை என்று நீரியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

பெய்கின்ற மழைநீர் தரையின்கீழே சேமிக்கப்படுவதற்கு தடையாக விளங்கும் காரணிகளில் இந்த பிளாஸ்ரிக் கழிவுகளுக்கும் பங்கு இருக்கிறது.

வீடுகளிலும், பொது இடங்களிலும் சேர்கின்ற பிளாஸ்ரிக் கழிவுகள் சரியான வழியில் அகற்றப்படாமல் அப்படியே நிலத்தினுள் புதைக்கப்படுகின்றன அல்லது புதையுண்டு போகின்றன. இவை நூற்றாண்டு காலத்துக்கு மண்ணில் அழியாமல் இருந்து பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லன.

மனித நடவடிக்கைகளால் நாளாந்தம் எமது மண் பறிபோய்க்கொண்டிருக்கிறது. 'ஷொப்பிங் பாக்' என்ற ஆபத்தான கவசம் ஒன்று எமது மண்ணை மூடி வளர்ந்துகொண்டிருப்பதை நம்மில் பலரும் அறியாமல் இருக்கிறோம்.

தமிழர்கள் பாரம்பரியமாக தாங்கள் வாழ்ந்த நிலத்தில் தமது இருப்பை உறுதி செய்வதற்காக இரத்தம் சிந்தி நடத்திய போராட்டம் இன்று அவர்களது அரசியல் உரிமைகளை நிர்ணயிக்கின்ற தீர்க்கமான ஒரு திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. துப்பாக்கிகள் ஓய்ந்தபோதும் போராட்டம் தீவிரம் பெற்று வருகிறது.

இந்த நேரத்தில் அரசியல் ரீதியான செயற்பாடுகளுக்கு அப்பால் தமது தேசத்தின் வளப்பாதுகாப்பு என்ற விடயத்திலும் தீவிர கவனம் எடுக்கவேண்டியவர்களாக தமிழர்கள் இருக் கின்றனர்.

அந்தவகையில் சூழல் பாதுகாப்பு முதலிடத்துக்கு வருகின்றது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஆரம்பித்திருக்கின்ற சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு தமிழ் மகனினதும் பூரண பங்களிப்புடன் வலுப்பெறவேண்டும். வன்னியில் பிளாஸ்ரிக் கழிவுகளைத் தேடி அகற்றும் இவர்களது நடவடிக்கை முன்னுதாரணமானது. தமிழர் பிரதேசங்கள் எங்கும் அதனை விரைவாக விரிவுபடுத்த வேண்டும்.

மண்ணுக்கான மற்றொரு போராட்டம் என்று கருதி இப்பணியில் அனைவரும் தம்மை இணைத்துக் கொண்டு தமிழ் மண்ணின் மகத்துவத்தைப் பேண திடசங்கற்பம் பூணுவார்களாக.

# குடாநாட்டில் பரவலாக கோஷ்டி மோதல்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்22

அண்மைக்காலமாக குடாநாட்டில் பல பகுதிகளிலும் கோஷ்டி மோதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எவ்வித காரணங்களுமின்றி வீதியால் செல்வோர் மீது தாககுதல் நடத்துவது, தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொள்வது, யுவதிகள் மீதான சேஷ்டைகளில் ஈடுபடுவது ஆகியவற்றின் காரணமாகவும், ஆலய, பொது வைபவங்களின் காரணமாகவும் இந்த மோதல்கள் ஏற்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

இவற்றின் காரணமாக வீதியால் செல்கின்ற மாணவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்கள், நோயாளிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோண்டாவில் ரயில் நிலையத்துக்கு அருகில் இரு இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்கானார். இதே தினத்தன்று கோண்டாவில், அன்னங்கைப் பகுதி இளைஞர்களுக்கும், கோண்டாவில் நாராயணா சனசமூக நிலையப்பகுதி இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சனசமூக நிலையப் பகுதியிலுள்ள வீடுகளின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டதுடன், பாலர் பாடசாலை, சனசமூக நிலையம் ஆகியவற்றின் கதவுகளும் பலத்த சேதமாக்கப்பட்டன.

அத்துடன், இணுவில் சந்திப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றிலும் பலர் காயமடைந்ததுடன் கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் - கூறப்பட்டது. (எ-10-49-86)

## நாட்டு நடப்பு

### சொல்லாமல் உண்டாள் நஞ்சு

சல்லி முட்டி கொண்டு
தான் சேர்த்த சில்லறையால்
நல்லவள் நாகம்மாவும்
நால் மூன்று முட்டை வாங்கி
செல்லமாய் வளர்த்த கோழிகொண்டு
சிறப்புற அடையும் வைத்தாள்
எல்லாமாய் இருபது நாள்
எண்ணியே முடித்த பின்பு
மெல்லமாய் குஞ்சொவ்வொன்றாய்
மெதுவாகத் தலையை நீட்ட
பொல்லாத 'ஷெல்' வந்துவீழ
பொசுங்கிற்று குடிசையொன்றாய்
எல்லாமே இழந்தோம் என்று
ஏங்கியே நாகம்மாவும்
சொல்லாமல் நஞ்சை உண்டு
சொர்க்கம் போய் சேர்ந்தாளன்றோ!

- விகடகவி.

### அரச ஊழியர்களுக்கான

# தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி; வழங்கும் நடைமுறையில் மாற்றம்

அச்சுவேலி,ஜுன்22

அரச ஊழியர்களுக்கு தேக்கநிலைச் சம்பள உயர்ச்சிகள் வழங்குவதற்கு பின்பற்றப்பட்டுவந்த நடைமுறைகள் - நிபந்தனைகள் - மாற்றி அமைக்கப்பட்டு வருடாந்தச் சம்பள உயர்ச்சியாக ஆண்டுதோறும் சம்பள உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

அரச ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி வழங்குவதற்கு இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டுவந்த நிபந்தனைகளின் பிரகாரம் -

இரண்டு வருடத்திற்கு ஒரு சம்பள உயர்ச்சி என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வந்ததோடு, முதலாவது தேக்கநிலைச் சம்பள உயர்வு மூன்று வருடங்களின் பின்னர் வழங்கப்பட்டது.

இந்த நடைமுறையில் சேவையில் மூத்த அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி வந்தனர். சாதாரணமானவர்கள் ஆண்டுதோறும் வருடாந்தச் சம்பள உயர்வு பெற்று அதிகரித்த சம்பளம்பெற சேவை மூப்பு மற்றும் உயர்பதவிகளிலுள்ளவர்கள் குறைந்தளவு சம்பள உயர்வினைப் பெற்றுவந்தனர்.

தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி தொடர்பான புதிய நடைமுறையின் பிரகாரம் தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி பெறுபவர்களுக்கு, 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஆண்டுதோறும் வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படும்.

சம்பள உயர்ச்சி மாற்றத்தினால் பெறக்கூடிய தேக்கநிலைச் சம்பளம் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேக்கநிலைச் சம்பள உயர்வு தொடர்பான புதிய அறிவுறுத்தல் பொதுநிர்வாக அமைச்சினால் சகல திணைக்களப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிய நடைமுறையின் பிரகாரம் சம்பள உயர்ச்சிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தேக்கநிலைச் சம்பள உயர்வினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. (எ-11)

### ஒரு மாத காலப்பகுதிக்குள்

# தியாகி திலீபன் மருத்துவப் பிரிவினர் 16 ஆயிரத்து 923 பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜுன்22

தமிழீழ சுகாதார சேவையின் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த மே மாதத்தில் மட்டும் 16 ஆயிரத்து 923 பேருக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம், ஐயன்குளம், நைணாமடு, கற்சிலைமடு, அலம்பில், பூநகரி, ஆழியவளை, கறுக்காய்க்குளம், நெடுந்தீவு, புளியங்குளம் ஆகிய பத்து மருத்துவ சிகிச்சை நிலையங்களின்மூலமே இந்த சேவைகள் வழங்கப்பட்டன என தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைகள் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் காய்ச்சல் - ஆயிரத்து 689 பேர், மலேரியாக் காய்ச்சல் - 161 பேர், சுவாசப்பாதைத் தொற்று - 2ஆயிரத்து 628 பேர், நெருப்புக் காய்ச்சல் - 4 பேர், தோல்நோய்கள் - 906 பேர், கண்நோய்கள் - 627 பேர், வயிற்றோட்டம் - 304 பேர், வலிப்பு - 147 பேர்.

குடற்புழுத் தொற்று - ஆயிரத்து 678 பேர், குருதிச் சோகை - 266 பேர், நாய்கடி - 56 பேர், பாம்புக்கடி - 9பேர், காயங்கள் - ஆயிரத்து 321 பேர், இதயநோய் - 203 பேர் சிகிச்சைபெற்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளை - தியாகதீபம் திலீபன் நடமாடும் மருத்தவ சேவையினால் 2 ஆயிரத்து 698 பேருக்கு நடமாடும் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டுள்ளது.(எ-10)

# பாடசாலை மாணவருக்கு சின்னமுத்து தடுப்பூசி

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

மண்டைதீவு,ஜுன்22

பாடசாலைகளில் சின்னமுத்து, காய்ச்சல் போன்ற நோய்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அறிவித்துள்ளார்.

பத்து தொடக்கம் 15 வரையான வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்னைய மருந்தேற்றல் பற்றிய விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்திலான இச்செய்திட்டத்தில் தரம் 3 முதல் தரம் 9 வரையான மாணவர்கள் உள்ளடங்கப்படவுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந்த மாதம் முதல் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களுக்கு இது சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-88)

### நாளை

ஆனி 08
திங்கட் கிழமை
(23.06.2003)
திதி : நவமி
பிற்பகல் 12.18 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முன்னிரவு 11.21 வரை.
சுபநேரம் : 11.54 - 1.24
ராகுகாலம் : 7.24 - 8.54
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒருவனும் ஏழையல்ல, ஏழை என்று எண்ணுபவனைத் தவிர்த்து.

# மனித பாவனைக்கு ஊறுவிளைவிக்கும் கறியுப்பு பல இடங்களிலும் விற்பனை

### தமிழீழ சுகாதார சேவை பணியகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்22

மனித பாவனைக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய கறியுப்பு தற்போது பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

இது குறித்து செய்திக் குறிப்பொன்றையும் மேற்படி பணியகம் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மனித பாவனைக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய குன்றுகளிலும், குழிகளிலும் உற்பத்தியாகும் உப்பு தற்போது பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இக்கறியுப்பு உரிய முறையில் பதனிடப்படவில்லை. இதனால், மனிதனுக்கு அத்தியாவசியமான அயடீன் சேர்க்கப்படாமையுடன் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மூலக்கூறுகள் அகற்றப்படுவதற்காக இவை களஞ்சியப்படுத்தப்படுவதுமில்லை. எனவே, உப்பு உற்பத்தி நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உப்பு தவிர்ந்த குன்றுகள், குழிகளில் எடுக்கப்படும் பதனிடப்படாத உப்பை உணவுத் தேவைக்கு பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் - என்று அதில் உள்ளது. (எ-8-ரி)

# பாடசாலை மட்டப் பரீட்சையை மேற்பார்வையிட குழு அமைப்பு

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மண்டைதீவு,ஜுன்22

இலங்கையில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் அனைத்துப் பரீட்சைகளையும் நடத்துவதற்கான பரீட்சை மேற்பார்வைக் குழுக்களை உருவாக்குவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவி அணியில் இடம்பெறவிரும்புபவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவினால் வெளியிடப்பட்ட 02.06.2003ஆம் திகதிய சுற்றறிக்கையுடன் -

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிபர்கள், அதிபர் சேவையில் உள்ளவர்கள், ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய ரீதியாக அமைக்கப்படவுள்ள பணிக்குழுவுக்கு சேவைக்காலம், கல்வித்தகைமை, தொழிற்றகைமை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். (எ-88)

# கருத்துத் தெளிவு, உறுதிபடக் கூறுதல் வித்துவான் வேலனின் சிறப்பியல்பு

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்

யாழ்ப்பாணம்,ஜுன்22

தமது கருத்தினை தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறும் உணர்ச்சிமிக்க தமிழன் வித்துவான் வேலன்.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

லண்டனில் காலமான தமிழறிஞர் வித்துவான் கலாநிதி க.ந.வேலனின் நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நீதியரசர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் காலத்தில் நல்ல மனிதர்களைக் காண்பது அரிது. ஆனால், இவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் வித்துவான்.

இயல், இசை, நாடகத்தின்மூலம் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தவர். இவர் சிறந்த பேச்சாற்றலால் தமிழ் நெறியை உலகமெங்கும் ஒலிக்கச் செய்தார்.

வாழ்க்கையைப் பார்த்து சிரிக்கக் கூடியவர்கள் ஒருசிலர் தான் இருக்கின்றார்கள். அவர்களுள் வித்துவான் வேலனும் ஒருவர். தம்மை உயர்த்தி மற்றையவர்களைத் தாழ்த்திப் பேசும் சராசரி மனிதர்களின் வாழ்க்கையானது தம்மை எதிர்த்துப் போராடுகின்ற எதிரியுடன் எந்தநேரமும் ஏட்டிக்குப் போட்டியாக நிற்கும் மனநிலையைத் தினமும் கொண்டிருக்கும். தம்மை மற்றவர்கள் மிஞ்சிவிடக்கூடாது என்ற எண்ணப்பாங்கிலேயே அவர்கள் காலத்தைக் கடத்துகிறார்கள்.

ஆனால், தன்னையும் வாழ்க்கையையும் ஒரே நேர்கோட்டில் வைத்து அக்கோட்டின் வழியே மேற்பார்வை செய்யக்கூடியவர், தமது பிழைகளைக் கண்டு பரகசிப்பார்கள், மற்றவர்களின் தவறுகளைக்கண்டு நகைப்பார்கள், வாழ்க்கையின் விசித்திரங்களையும் முரண்பாடுகளையும் கண்டு வாய்விட்டுச் சிரிப்பார்கள் - இவ்வாறு நகைச்சுவையுடன் வாழ்வைப் பார்த்து பரிகசித்தவர்கள் உலகைக் கண்டு பயப்படமாட்டார்கள்.

உண்மைக்கு மதிப்புக் கொடுத்து தம்மைப் பற்றியே தினமும் சிந்திக்கும் உன்மத்தவர்களை மதிக்கமாட்டார்கள். இத்தகையவர்களில் வித்துவான் வேலனும் முதன்மையானவர். இவரை சிறந்த தமிழ் அறிஞர் என்று பாராட்டுவதிலும் பார்க்க சிறந்த தமிழ் மனிதர் என்று பாராட்டுவதை பெருமையாகக் கருதுகிறேன்.

இவர் சிறந்த மனிதர்களையும், மனிதப் பண்புகளையும் மதிப்பவர். இதனால்தான் இவர் அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தபோதும், தனது கட்சியில் இருந்த சிறந்த மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களைப் புகழ்ந்து பேசுபவர்.

சமுதாயம் போற்றவேண்டும் என்பதற்காக தமது வாழ்க்கையை மாற்றி அமைத்து ஒரு போலி வாழ்க்கை வாழ்ந்து வருபவர்களை அவர் மதிப்பதில்லை. மதிக்க வேண்டியவர்களை மதித்து வேடதாரிகளை புறக்கணித்த அவர் சில சமயங்களில் பலரது கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாகியிருக்கின்றார்.

அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர், தான் சார்ந்த கட்சி சார்பாகப் பேசினாலும் எதிர்க்கட்சியில் இருப்பவர்களின் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் தயங்கமாட்டார். இவருடைய இக்குணாதிசயத்தை அறிந்தவர்கள் இவருடைய இக்குணாதிசயத்தை ஒருபோதும் தவறு எனக் கருதமாட்டார்கள்.

எனவே, வித்துவான் வேலன் மறைந்துவிட்டாலும் அவர் நின்ற வழியில் அஞ்சாது நின்று அரும் தமிழ்ப் பணி ஆற்றுவதே எங்கள் அனைவருடைய பணியாகும். இதுவே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

**லண்டன் குழுவின் உதவியுடன்**

## வெண்புறா தொழில்நுட்ப அலுவலருக்கு பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜுன்22

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவன தொழில்நுட்ப வியலாளர்களுக்கு லண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கென லண்டனில் இருந்து மூவர் கொண்ட குழுவொன்று கிளிநொச்சிக்கு வருகைதந்து 3 மாதகாலப பயிற்சிகளை வழங்கவுள்ளதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று மாதகாலப் பயிற்சிகள் நிறைவடைந்ததும், அவயவங்களை இழந்த ஆயிரம் பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்படவுள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனத்தினால் கடந்த 9 வருட காலத்தில் ஆயிரத்து 658பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், 12ஆயிரத்து 461பேருக்கு செயற்கைக் கால்கள் திருத்தம்செய்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், பாதணிகள், கலிப்பர்கள் ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன என்று மேற்படி அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)



எழுத்தாளர் ராணி சீதரன் எழுதிய 'நடுகல்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நூலாசிரியை திருமதி ராணி சீதரன் வரவேற்புரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் சுகாதாரப் பணிப்பாளர் ப.ரோமமகேஸ்வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.எஸ்.ஸ்ரீதயாளன், பாடசாலை அதிபர் எஸ்.நடராஜா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)




கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையாவின் 'எழுந்தெழுவோம்', 'சிந்தனைத் துளிகள்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். எழுத்தாளர் கோகிலா மகேந்திரன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், நூலாசிரியை மலர் சின்னையா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)

### பரந்தன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம்,ஜுன்22

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட் ஊழியர்களின் சம்பளம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும் என தொழில் முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-ரி)

### தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜுன்22

சுதுமலை யுகசக்தி கியூடெக் உயிர்ப்பூட்டல் குழுவினருக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி இன்று காலை 9 மணிக்கு, சுதுமலை யுகசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

### மாதகல் பகுதியில் காவல் அரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

மாதகல்,ஜுன்22

மாதகல் கடற்படை முகாமைச் சூழவுள்ள காவல் அரண்கள் தற்பொழுது கடற்படையினரால் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.(எ-10-ரி)

### வலி.மேற்கில் சீருடை முத்திரை பெற அறிவுறுத்து

வலிகாமம் மேற்குப் பகுதி பாடசாலைகளில் இந்த ஆண்டில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களின் சீருடைத் துணிக்கான முத்திரைகளைத் தத்தமது பகுதிக் கிராம அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலர் முசிவராசா அறிவித்துள்ளார். (எ-10)

### உடுவில் கல்விக் கோட்ட ஆங்கிலதினப் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் மருதனார்மடம், இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (எ-10-152)

# நூல் வரிசை



**நூல்: திருவிளையாடல் பூசைப் பாமலர்கள்**
**ஆசிரியர்: கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி**
**வெளியீடு: சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

பக்திநூல்கள் பலவற்றை இலவசமாகத் தந்துள்ள நூலாசிரியர் அது கதிர்காமத்தம்பியின் திருவிளையாடற்பூசைப் பாமலர்கள் என்னும் இந்த நூல் பக்திப் பரவசம்மிக்க ஒரு நூலாகும். இறைவனின் 64 திருவிளையாடல்களும் அழகு தமிழில் எளிமையாக சிறுபிள்ளைகளுக்கும் விளங்கும்வகையில் ஆக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு திருவிளையாடலின் பெருமையையும் கூறி வாழ்த்துவதன் மூலம், அத்தகைய இறைவனின் அற்புதங்களை அறிய விரும்பும் ஆவல், அருட்தாகம் உள்ளவர்களிடத்தில் அதிகரிக்கச் செய்வதாகவுள்ளது.

நமஹ எனப் போற்றுவதாக அமைந்துள்ள இந்த நூலும் பக்தி இலக்கிய வரிசையில் இடம்பெறும் சதநாமாவளி, அஷ்டோத்திரநாமாவளி வரிசையில் சிறந்த அர்ச்சனைப் பாமாலை நூலாகவும் விளங்குகின்றது.

திருவிளையாடல் பூசைப்பாமலர்கள், திருவிளையாடற்பூசை பாமலர்களும் பாமாலைகளும் திருவிளையாடல்களின் சுருக்கங்களும் நூற்பயன், வாழ்த்து என்றும் பகுதிகளைக் கொண்டுள்ள இந்த நூலின் இரண்டாம் பகுதியில் பாமலர்களில் சொல்லப்பட்ட அருட்கதைகளின் சுருக்கத்தினைச் சிறப்பாக அறிமுகஞ்செய்யும் பாங்கு பாராட்டத்தக்கது.

திருவிளையாடற்புராண மகிமையினை நாமாவளிவகையில் இப்படியும் அறிமுகப்படுத்தலாம் என்பதனை ஆசிரியர் திறமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

மதுரையில் மீனாட்சி அம்பாள் சமேதராக வீற்றிருந்து அருள்பாலிக்கும் சொக்கலிங்கப் பெருமானின் திருவிளையாடல்களை கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி அவர்கள் சாதாரண மக்களும் விளங்கக்கூடியவகையில் எளிய நடையில் பக்திரசம் ததும்பும் பாடல்களைப் பாடியுள்ளார்.



**நூல்: சிந்தனைத் துளிகள்**
**ஆசிரியர்: மலர் சின்னையா ('செம்பியின் செல்வி')**

சிந்தனைத் துளிர்கள் என்னும் இக்கட்டுரைத் தொகுதியில் உள்ள கட்டுரைகளின் வடிவம் நீண்ட அறிகை வீச்சுக் கொண்டது. ஆழ்ந்த அகவயப் பாங்கிலிருந்து செறிவான புறவயப்பாங்கு வரையிலான நெடும் வீச்சுக் கொண்டது. எளிமையான இலகு நடையிலிருந்து இறுக்கமான, சிக்கலான கடினநடை வரை விரிந்த எல்லைகளைக் கொண்டது.

கட்டுரை வடிவத்தின் விரிந்த பரப்பளவும் பன்முகப் பரிமாணங்களும் கற்றல், கற்பித்தற் செயல்முறையில் பல தளங்களிலே எடுத்தாளப்படுகின்றன.

உடனடி மனவெழுச்சிகளை வெளியிடும் கட்டுரைகள், உறைந்த உணர்வுகளை வெளியிடும் கட்டுரைகள் என்றவாறு கலையாக்கக் கட்டுரைகள், சுவைத்தலிலும், நயத்தலிலும் பயன்படுத்தப்படுகின்றன.

அத்துடன், சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் இயல்புக்கும் கலைத்திட்டத்திலே பயன்படுத்தப்படும் கட்டுரை வடிவங்களுக்குமிடையே தொடர்புகள் இக்கட்டுரைத் தொகுதியில் காணப்படுகின்றன.



**நூல்: ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாட்டுச் சிறப்பிதழ்**
**ஆசிரியர்: தமிழ்வேள்**
**வெளியீடு: ரெக்னோ பிரின்டேர்ஸ், வெள்ளவத்தை**

ஈழநாட்டில் பண்டைக்காலம் முதல் பெரும் தமிழ்ப் புலவர்கள் இருந்தனர். இவர்கள் மிகப் பயனுள்ள நல்ல நூல்களை எழுதியுள்ளனர். இவர்களுள் சிலர் பல நாடுகள் சென்று பெரும் தமிழ்ப் பணி செய்துள்ளனர். இவர்களைப் பற்றியும் இவர்கள் எழுதிய நூல்களைப் பற்றியும் இன்று பலர் அறியாதுள்ளனர்.

இந்த வருடம் நடைபெற்ற ஈழத்து தமிழ்ப் புலவர் மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையில் வெளிவந்துள்ள இந்தச் சிறப்பு மலரில் பண்டைக்காலம் முதல் அண்மைக் காலம்வரை ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் விவரங்கள் ஓரளவு தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் புலவர்கள் 235 பேரின் பெயர் விவரங்கள் மற்றும் எழுதிய நூல்கள் என்பன வரன்முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். அத்துடன், அறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளுடன் இந்த மாநாட்டின் நோக்கத்தினை நிலைபெறச் செய்யும்வகையிலான ஏழு தீர்மானங்களும் இடம்பெற்றுள்ளன.



**நூல்: இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்**
**ஆசிரியர்: எஸ். பி. கிருஷ்ணன்**

'செந்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ்' என்றெல்லாம் புகழப்படுவது நமது தாய்மொழியான தமிழ்மொழி.

பேச்சுத் தமிழில் யாழ்ப்பாணத் தமிழ் எல்லோராலும் மிக எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடியது. அந்த நல்ல இலகு தமிழில் அழகாக எழுதப்பட்ட நூல்தான் 'இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' இலங்கைத் தமிழர் இற்றைநாள்வரைபட்ட கஷ்டங்களையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து சம்பவங்களைப் பின்னிப் பிணைத்து சிறுசிறு கதைகளாக வடிவமைத்துத் தந்திருக்கின்றார் நூலாசிரியர்.

முன்னர் யாழ்ப்பாணத்திலே வசித்த மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் குடியமரச் சென்றபோது ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களையெல்லாம் அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். பாமரமக்களும் படித்து விளக்கிக்கொள்ளக்கூடிய வகையில் எளிய தமிழில் எழுதியிருப்பது ஆசிரியரின் எழுத்துத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. யாழ்ப்பாணத்திலே எவ்வாறு ஒருவருக்கொருவர் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்கின்றார்களோ அந்த மாதிரியே சம்பாஷணைகள் அமைந்திருக்கின்றன. இது புத்தகத்தின் விசேட அம்சம்.

இதிலுள்ள ஒவ்வொரு கதையும் அதை வாசிக்கும் போது அதனோடு நம்மை ஒன்றிப் போகச் செய்து விடுகின்றன. கதைகளை எழுதிய அனுபவம் அவரது பன்முகப்பட்ட சம்பவத் தொகுப்பு வாயிலாக நன்கு வெளிப்படுகின்றது. கதையில் வரும் பாத்திரங்களை என்ன குணாதிசயங்களோடு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் கூடிய அக்கறை காட்டியிருக்கின்றார் ஆசிரியர்.

அது மாத்திரமன்றி இலக்கிய நயமும் ஆங்காங்கே செறிந்து விளங்குவது இதன் சிறப்பம்சமாகும். சிறுகதைகளை விரும்பிப் படிக்கும் வாசகர்களுக்கு இது நல்ல வரப்பிரசாதம். நல்ல கதைகளை வாசித்தோம் என்ற ஒரு திருப்தியை ஏற்படுத்தும் இந்நூல் யாழ்ப்பாண மக்களின் வேதனைகளை எடுத்துக் கூறும் அதேநேரத்தில் அவர்களின் சாதனைகளையும் பறைசாற்றி நிற்கின்றது.

# தமிழ் சினிமாவில் சில வித்தியாசமான முயற்சிகள்

## அன்றும் இன்றும்

**க.சட்டநாதன்**

2

சினிமா எனும் ஊடகத்தின பல பரிமாணங்களைப் புரிந்து வைத்திருக்கும் இவரது முதல் படம் 16 வயதினிலே. இத் திரைபபடம் தமிழ்ச்சினிமா வரலாற்றில் பல மாற்றங்களுக்குக் காரணமாய் அமைந்ததாகும். சினிமாவின் நாடக பாங்கான வசனங்கள், முகம் முழுவதும் அரிதாரத்தை அள்ளிப் பூசும் ஒப்பனை மோஸ்தர் என்பன இப்படத்தில் இல்லாமலானது. அத்துடன், நடிப்பில் அரிதாகி இருந்த நம்பகத் தன்மையை இவரால் கொண்டுவர முடிந்திருக்கிறது. படப்பிடிப்பு நிலையங்களில் (studies) நிர்மாணிக்கப்பட்ட செயற்கையான அரங்குகளை விட்டு - வெளியே - இயற்கைச் சூழலை நாடிவந்த கலைஞர் இவர். அதாவது, முழுமையான அர்த்தத்தில் இப்பணியை இவருக்கு முன்னதாக ஸ்ரீதர் அவர்களும் ஓரளவு செய்துள்ளார்கள்.

இவரது ஏனைய நல்ல படங்களென நிழல்கள், கருத்தம்மா, என் உயிர்த்தோழன், அந்திமந்தாரை, கடற்பூக்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவரது காலத்துக்கு முன்பின்னாக கவனிப்புக்குரிய வேறு சில படங்களும் வரவே செய்தன. அந்த வகையில் சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள், வேலைக்காரி, ஓர் இரவு, திரும்பிப் பார், கானல் நீர், மதுரைவீரன், மலைக்கள்ளன், சாரதா, காவல் தெய்வம், தெய்வப்பிறவி, இரும்புத்திரை, படிக்காத மேதை, பாவைவிளக்கு, கப்பலோட்டிய தமிழன் ஆகியன குறிப்பிடக்கூடிய படங்களாகும்.

எழுபதுகளின் பிற்கூற்றையும் எண்பதுகளின் ஆரம்ப தசையையும் தமிழ்ச்சினிமாவின் சிறப்பான காலம் எனலாம். இக்காலத்தில் நல்ல திரைப் படங்கள் எனத் தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட திரைப் படங்கள் சில தமிழில் வரவே செய்தன. பாலு மகேந்திராவின் அழியாத கோலங்கள், ஜெ.மகேந்திரனின் உதிரிப்பூக்கள், ஜி.துரையின் பசி ஆகியன குறிப்பிடத் தக்க கலை நேர்த்தியை அண்மித்த படங்களாகும்.

(இவர்களைத் தவிர, ஜெயகாந்தன், பரதன், ருத்ரையா, கே.பாலசந்தர், ஸ்ரீதர்ராஜன், ஹரிஹரன், சோமசுந்தரேஸ்வரர், மணிரத்தினம், ஞானராஜசேகரன், தங்கர்பச்சான், நாசர், சந்தோஷ் சிவன், ஞானரதன் (இவர் ஈழத்துக் கலைஞர்) போன்றவர்களும் கனிசமான பங்களிப்பினைத் தமிழ் சினிமாவின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ளார்



குட்டி படத்தில் ஒரு காட்சி...

கள் என்றே கூறவேண்டும்.

எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றினை உடைய தமிழ்ச்சினிமாவுக்கு இது பெருமை சேர்க்கும் விஷயமா? எனக்கு விடை தெரியவில்லை.

பாலுமகேந்திராவின் வருகையோடு, தமிழ் திரையுலகு தரமான கலைஞர் ஒருவரைப் பெற்று விடுகிறது. நான் ஏலவே கூறியதுபோல் திரையில் நாடகங்களையே (அசல் Theatre ஐ நான் இங்கு குறிப்பிடவில்லை) பார்த்துப் பழக்கப்பட்டுவிட்ட தமிழ் ரசனைக்கு, சற்று வித்தியாசமான அதிர்ச்சி அழியாத கோலங்கள் ஒரே தடத்தில் சென்று பழக்கப்பட்ட இந்த ரசனையை புதிய கலைச்சூழலுக்கு இட்டுச் செல்வது சிரமமான விஷயம் தான். இவ்வகையில் அழியாத கோலங்கள் சிறப்பாகச் சொல்லப்பட வேண்டிய படமாகி விடுகிறது.

வாழ்வின் ஒரு பகுதியை-வளரிளம பருவத்தின் மெல் உணர்வுகளை, சலனங்களை, சபலங்களை, தாபங்களை, சின்னச்சின்னச்சுகங்களை, ஆழமான துக்கங்களை கிராமியச்சூழலில், மரங்கள் அடர்ந்த, மழைபட்டுக் கசியும் செம்மண்பாதைகளில் பசிய தடங்களில் வயல்வரப்புகளில், புதுப்புனலின் சலசலப்பின் பின்னணியில் பாலுமகேந்திராவின் கமரா கவிதையாக்கிவிடுகிறது.

இவரது மூடுபனி, ஹிச்ஹொக்கின் Psycho திரைப்படத்தினை ஞாபகப்படுத்தியபோதும், வித்தியாசமான படம் பார்க்கக்கூடிய படங்களாக யாத்ரா (மலையாளம்) சந்தியாராகம், வீடு, மறுபடியும், ஜூலிகணபதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**அரசியல் படம் எடுப்பதென்பது ஒரு தவம் போன்றது. அதில் உண்மைகள் யாவும் உள்ளபடியே பதிவு செய்யப்பட வேண்டும். விமர்சனங்கள் ஏதும் இருப்பின் அவை நேர்மையுடன முன்வைக்கப்படவேண்டும் அதை விடுத்து, மணிரத்னம் இத்தகைய தனது திரையாக்கங்களில், அரசியலை அல்லது அரசியல் வரலாற்றை, மலினப் படுத்தப்பட்ட வடிவில்- இந்திய தேசியம், தேசிய ஒற்றுமை என்ற மாயைகளுடன் வெளிப்படுத்துகின்றார். இத்தகைய முயற்சிகள் கலைப் படங்களையல்ல, கலைப் போலிகளையே உருவாக்க உதவும்.**

இத்திரைப்படங்களின் பின் இவர் எடுத்த எந்தத் திரைப்படமும் சிறப்பாக அமையவில்லை. மூன்றாம் பிறையில் கமராவின் பணி சிறப்பாக இருந்தது. பல சமரசங்களுடன் நீங்கள் கேட்டவை, இரட்டைவால் குருவி, சதிலீலாவதி ஆகிய திரைப்படங்களையும் இவர் இயக்கியுள்ளார். இப்படங்களிலும் இவரது கமரா திருப்தி தருவதாக உள்ளது.

மிக எளிமையான திரைப்பிரதி, கச்சிதமான உரையாடல், மனதைச் சொந்தமுடன் நெருங்கி வந்து தொடும மனிதர்கள், இவையே இவரது சிறப்புக்கள் எனலாம்.

பார்வையாளனின் ஏற்புத்திறன் மிக மந்த நிலையில் உள்ள தமிழ் சினிமாச் சூழலில், 'மக்களை எட்டாத எந்த ஒரு படைப்பையும் நல்ல படமாக ஏற்றுக்கொள்ளமாட்டேன்' எனத் துணிந்து கூறும் ஜெ.மகேந்திரன் தமிழ் சினிமா உலகுக்குக் கிடைத்த இன்னுமொரு நல்ல கலைஞர்.

சாதாரண மக்கள் தடக்கமேதுமின்றி நெருங்கி வரத்தக்க இடைநிலைப்படங்களை (Middle Cinema) ஆக்கியுள்ள இவர், மேம்பட்ட ரசனையோடு கூடிய, அரூபத்தன்மையான (Abstract) திரைப்படங்களை எடுப்பதிலும் பார்க்க 'Middle Cinema பயனுடையது எனும் கருத்தினை மிக அழுத்தமாகப் பற்றி நிற்பவர்.

முள்ளும் மலரும், நெஞ்சத்தைக் கிள்ளாதே, உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், மெட்டி, நண்டு, அழகிய கண்ணே, கைகொடுக்கும் கை, ஜானி ஆகிய திரைப்படங்களை இவர் நெறிப்படுத்தியுள்ளார்.

இவரது திரையாக்கங்கள் குறிப்பாக மத்தியதரவர்க்க மனிதர்களது வாழ்க்கை அநுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. கற்பனை என்று ஒதுக்க முடியாத இயல்பான மனிதர்களையே இவர் தனது திரைப்படங்கள் மூலம் சித்திரிக்கின்றார்.

திரைப்பட நுணுக்கங்களைப் பற்றிய ஆழ்ந்த, திருந்திய அறிவு-சிக்கலில்லாமல் பாத்திரங்களை நகர்த்திச் செல்வதற்கு - இவருக்குப் பெரிதும் உதவுகிறது. திரைப்பிரதி ஆக்கத்திலும் மிகக் கவனிப்பும் அக்கறையும செலுத்துகிறார் என்பதற்கு இவரது திரையாக்கங்கள் சான்றாக உள்ளன.

இவர் காட்டும் மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் குறைபட்டவர்கள்; முழுமையற்றவர்கள்; கைநழுவிப் போன பூரணமின்மையை தீவிரமாக உணர்பவர்கள். அந்த முழுமையை நாடும் முயற்சி பொதுவாக இவர்களுக்குத் தோல்வியையே தருகிறது. இருப்பினும் வாழ்க்கை மீதான ஓர் அத்மார்த்த பிரீதி. தளர்ச்சியற்ற பிடிப்பு இவர்களுக்கு என்றும் மாறுவதில்லை.

மகேந்திரன் அடிப்படையில் உன்னதங்களை அவாவும் கலைஞனாக எப்பொழுதுமே தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவரில்லை. ஆனாலும், அவரது 'உதிரிப்பூக்கள்' ஒன்று மட்டுமே அவரை நீண்டநாள்கள் ஞாபகத்தில் வைத்திருக்கப் போதுமானது. இத்திரைப்படத்தினை Near master piece என்று சொல்லலாம்.

ஜி.துரை வர்த்தக சினிமாவுடனேயே பெரும்பாலும் தொடர்புடையவராக இருந்த போதிலும், பசி திரைப்படத்தை எடுத்ததன் மூலம் நமது கணிப்புக்கு உள்ளாகிறார்.

பசிபடத்தில் வரும் குப்பம்மா, அவளது அநாதரித்தனமான அப்பா, பொறுப்புக்கள் ஏதுமற்ற உடன் பிறப்புக்களிடையே மிதந்துபோகும் அம்மா, அந்தலொறி ட்ரைவர், அவளது சிநேகம், அதர்களிடையிலான உறவு, அந்த உறவைப் புரிந்துகொண்டு குப்பம்மாவுக்காக நெகிழ்ந்து போகும் லொறி ட்ரைவரின் மனைவி... சேரியின் மடியில் ஓர் உயிர்ப்பான கதை உருவாகிவிடுகிறது.

ஷோபா என்ற சிறப்பு மிக்க நடிகையின் வரவு இத்திரைப் படத்தின் மூலமே அழுத்தமாக உணரப்படுகிறது. அகில இந்திய அளவில் அவர் கணிக்கப்படுவதற்கும் ஊர்வசி விருதினைப் பெறுவதற்கும் இத்திரைப்படமே ஏதுவாய் அமைந்துள்ளது எனலாம்.

[illegible]நாரந்தன் பல திரைப்படங்கள் உருவாவதற்கு, நெறியாளர் அல்லது திரைப்பிரதி ஆசிரியர் என்ற அளவில், மிகுந்த அர்வத்துடன் உழைத்துள்ளார். இவரது திரைப்படங்கள் சமூகம் பற்றிய உணர்வும் அக்கறையும் கொண்டவையாக இருக்கின்றன. உன்னைப் போலொருவன், சில நேரங்களில் சில மனிதர்கள் ஆகியன பலராலும் சிலாகித்துப் பேசப்படும் திரைபபடங்களாகும். அத்துடன், உன்னைப் போலொருவன் தேசிய அளவில் விருதுபெற்ற படமும் கூட. அவரது [illegible] அழுதான், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் என்பனவும் பார்க்கக்கூடிய படங்கள்.



கடல்பூக்கள் படத்தில் ஒரு காட்சி...

பொதுவாக உரத்துப்பேசும் இவரது கதைமாந்தர், திரைப்படத்தில் இயல்பு மிக்கவர்களாயும் ஆரவாரமேதுமற்று அடங்கி ஒலிப்பவர்களாயும் இருப்பது மனதுக்கு இதமாயிருக்கிறது.

பிராமண சமூக ஆதர்சங்களை மிகத்துணிச்சலோடு கேள்விக்கு உட்படுத்தும் பரதனின் 'சாவித்திரி' இந்த சமூக அமைப்பில் பெண் என்பவள், ஒடுக்கப்பட்டவள்; இரண்டாம் பட்சமானவள் எனும் கருத்துக்கு எதிரிடையாக இயங்கும் உணர்வும், போக்குமுடைய பெண் ஒருத்தியை மையப்படுத்தி எடுத்த. ருத்ரையாவின் அவள் அப்படித்தான், அரசமைப்பின் ஆசாடபூதித்தனத்தையும் மக்களின் வாழ்நிலை அவலத்தையும் தத்ருபமாகச் சித்திரிக்கும் கே.பாலசந்தரின் தண்ணீர் தண்ணீர், நாசரின் தேவதை, அவதாரம், இந்திரா, பார்த்த சாரதியின் குறுநாவலான உச்சி வெயிலை தழுவி எடுக்கப்பட்ட சேது மாதவனின் மறுபக்கம், பாபு நந்தன் கோடு இயக்கிய தாகம் ஆகியன, தமிழில் வந்த இன்னும் சில நல்ல படங்கள்.

ஸ்ரீதர்ராஜனின் கண்சிவந்தால் மண சிவக்கும், ஹரிஹரனின் ஏழாவது மனிதன், சோமசுந்தரேஸ்வரரின் வசந்தம்வரும், தர்மசேன பதிராஜாவின் பொன்மணி, பூமணியின் கருவேலம் பூக்கள், இன்னும், குட்டி, நிலாக்காலம ஆகியவற்றையும் நல்ல படங்களின் பட்டியலில் சிறிது தயக்கத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்படங்களுடன் கமலஹாசனின் ராஜபார்வை, பேசும்படம், குணா, குருதிப்புனல், ஹேராம், அன்பே சிவம் என்பன ஓரளவு வித்தியாசமான படங்கள் என்ற அளவில் நமது அவதானிப்புக்கு உரியன. இப்படங்களில் ராஜபார்வை, பேசும்படம், குருதிப் புனல் என்பன சிங்கீதம் சீனிவாசராவ் அவர்களால் இயக்கப்பட்டவையாகும்.

ஜோன் ஏப்ரகாம் இயக்கிய அக்கிரகாரத்தில் கழுதை, ஜெயபாரதியின் குடிசை ஆகிய திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இப்படங்கள் இரண்டுமே பெருமைப்படத்தக்க தயாரிப்புகள் எனும் கணிப்பு, விமர்சகர்கள் மத்தியில் உண்டு.

இத்திரைப்பட ஆளுமைகளுக்குப் பின்னால் வந்த, சில இயக்குநர்கள் பற்றியும், அவர்தம் படைப்புகள் பற்றியும் இனிப்பார்ப்போம்.

முதலில் மணிரத்னம் சினிமா மொழியைக் கையாள்வதில் பூரண ஞானமுள்ள இவர்- ரோஜா, Bombay, உயிரே, கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற அரசியல் பின்னணியைக் கொண்ட படங்களையும் நாயகன், தளபதி, அக்கினி நட்சத்திரம் போன்ற வன்முறையை முதன்மைப் படுத்தும் படங்களையும் இயக்கியுள்ளார். சற்று வித்தியாசமான திராவிட இயக்க அரசியலை மலினமாகக் கொச்சைப்படுத்தும் - இவரது இன்னொரு படம் இருவர். இவரது அஞ்சலி வலது குறைந்த குழந்தை ஒன்றை மையப்படுத்தி எடுத்தபடம்.

ரோஜா, உயிரே, கன்னத்தில் முத்தமிட்டால் ஆகிய படங்களில், போராளிகள் அல்லது போராளிக் குழுத்தலைவர்கள் பெரும்பாலும் கருமை நிறமுடையவர்களாகவும் மிகைப்படுத்தப்பட்ட வன்முறையாளர்களாகவும் காட்டப்படுகிறார்கள். அரசியல் படம் எடுப்பதென்பது ஒரு தவம் போன்றது. அதில் உண்மைகள் யாவும் உள்ளபடியே பதிவு செய்யப்பட வேண்டும். விமர்சனங்கள் ஏதும் இருப்பின் அவை நேர்மையுடன முன்வைக்கப்படவேண்டும் அதை விடுத்து, மணிரத்னம் இத்தகைய தனது திரையாக்கங்களில், அரசியலை அல்லது அரசியல் வரலாற்றை, மலினப் படுத்தப்பட்ட வடிவில்- இந்திய தேசியம், தேசிய ஒற்றுமை என்ற மாயைகளுடன் வெளிப்படுத்துகின்றார். இத்தகைய முயற்சிகள் கலைப்படங்களையல்ல, கலைப்போலிகளையே உருவாக்க உதவும்.

எது எவ்வாறு இருப்பினும், அவரது திரைப்படங்கள் காட்டி நிற்கும் தொழில் நுட்பத்தரம், சொல்ல வந்த விஷயத்தை தமது கருத்தியலுக்கு முதன்மை கொடுத்த போதும் - தெளிவாகச் சொல்லும் பாங்கு என்பன பாராட்டப்பட வேண்டியவை என்றே நினைக்கின்றேன்.

தி.ஜானகிராமனின் மோகமுள், பாரதி, முகம் ஆகிய படங்களைத் தந்துள்ள ஞான - ராஜசேகரனும் தமிழ சினிமா உலகில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய இளைய தலைமுறை இயக்குநர்.

அவரது மோகமுள், கலைப்படமாக உருவானதில் பெருமளவு வெற்றி பெறாவிட்டாலும் கலைப்படத்துக்குரிய சில கூறுகளைத் தன்னகத்தில் கொண்டுள்ள படம் எனக் கூறலாம். நாவலின வாசிப்பு அநுபவத்தைத் திரைப்படம் தராத போதும் பிராமண சமூக அமைப்பினுள் சரிந்து வரும் அதன் மதிப்பீடுகள், அத்மானுபவம் சங்கீதம் என்பன வியாபாரமாகி வரும் சூழல், தேவதாசிமுறையில் ஊறியெடுத்து நிற்கும் கொடுமைகள், அதைப்பேண முயலும் பிராமணியத்தின் சுயநலத்தனங்கள் என்று எல்லாமே நாவலின் விசுக்குதசமதையாக வராவிடினும் - மெல்லிய பட்டிழையாய்ப் பளபளப்புடன் படத்தில் வருவது, ஞான - ராஜசேகரனது கலையின் வெற்றி என்றுதான் கூறவேண்டும்.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1 1/2 மாதம் நிரம்பிய நல்லின அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.ஜெயச்சந்திரன், பண்ணாகம், சுழிபுரம். (19229)

அரியாலை, யாழ்ப்பாணம், கண்டி வீதியில், புங்கங்குளம் சந்திக்கு அருகில் 9 பரப்பு வெற்றுக்காணியும், மாம்பழம் சந்திக்கும், தபால் கட்டை சந்திக்கும் இடையில் வீட்டுடன 3 1/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.கொழும்பு 597664, யாழ்ப்பாணம் 2790. (சி-28452)

இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம் - சிறுகதைகள். எஸ்பி.கிருஷ்ணன் சேலம் கே.ஆர்.ஜீ.அறக்கட்டளையின் இலக்கியப் பரிசுபெற்ற நூல. ரூபா 110/-. பிரதான புத்தகக்கடைகளிலும பின்வரும் இல்லத்திலும் பெறலாம். 126A, கண்டி ரோட் (புங்கன் குளம் சந்தியருகில்), யாழ்ப்பாணம். (19256)

இல.31/23, சபாபதி வீதி, தலையாழி, வண்ணார்பண்ணை கிழக்கு, வண்ணார்பண்ணையில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விரும்புவோர் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (19341)

கலர்மீன்கள், புதிய வடிவமைப்பிலான மீன்தொட்டிகள், மோட்டர்கள, பல இன குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (19365)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (19227)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள விற்பனைக்குண்டு. 1Kg 145/=. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (C/28476)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 130/-. சுத்தம செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867. (19346)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Dachund, Great Dane Cross நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (19333)

## காணி தேவை

கே.கே.எஸ்.வீதிக் கரையில் இணுவிலுக்கும் தட்டாதெருவுக்கும் இடையில் 5 பரப்புக் காணி உடனே தேவை. விவரங்களுக்கு: 103/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி 077-6013572. (19360)

## வீடு தேவை

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட அல்லது அதன் சுற்றுப்புறங்களில் ஓரளவு வசதியான வீடு வாடகைக்கு குடியிருப்பதற்கு கூடிய விரைவில் தேவைப்படுகிறது. வாடகை மற்றும் முற்பணம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: G.கணேசலிங்கம், கொழும்பு 10. T.P.341330 அல்லது திருமதி சிவராஜா, இல.16, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (19345)

## வீடு வாடகைக்கு

பிரதான வீதிக்கு அண்மையில் புதுப்பிக்கப்பட்ட 4 படுக்கை அறை, வாகனம் நிறுத்தும் வசதி கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: தொலைபேசி இல. 222 5957. (19327)

## மணமகன் தேவை

சாவகச்சேரியைச் சேர்ந்த, இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த, 39 வயதுடைய, 7 செவ்வாய்க் குற்றமுள்ள மணமகளுக்கு பெற்றோர் மணமகனை எதிர்பார்க்கின்றனர். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விளம்பர இல.1922, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (18948)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் பிரித்தானியாவில் நிரந்தர பிரஜா வுரிமையுள்ள, 41 வயது (மகர நட்சத்திரம்), விசேட டாக்டர் (Consultant விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு 35 வயதுக்கு மேற்படாத, படித்த, ஆங்கில அறிவுள்ள, அழகிய பெண்ணைத் தேடுகின்றனர். சாதகக் குறிப்பு, படம் மற்றும் விவரங்களுடன V.மயில்வாகனம், வேதக்கோயில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். (19361)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 43வயதுடைய, ஜேர்மனியில நிரந்தர வதிவிட உரிமையுள்ள, செவ்வாய் தோஷமுடைய மணமகனுக்கு 38வயதுள்ள அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவி தொலைத் தொடர்பு சேவை, திருநெல்வேலி. T.P. No. 021- 222 - 2142. (சி-28601)

## கைமாறிவிட்டது!

10-06-2003 அன்று (769 இலக்க பஸ்) முகமாலையிலிருந்து பருத்தித்துறை வந்தபோது உடுப்பிட்டி சிவராம் ஸ்ரீஸ்கந்தராணி என்பவருடைய Bag ஒன்று தவறுதலாக கைமாறிவிட்டது. மாறி எடுத்துச் சென்றவர்கள கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (உள்ளே I.C இருக்கின்றது) சிவராம் சிறிஸ்கந்தராணி, சந்தனத் தரை, உடுப்பிட்டி. (19359)

## செவ்வாய் மாற்றம் எப்படி?

01.08.2003 - 06.10.2003 இலங்கை ராசி கும்பத்தில் இரு மாத வக்கிர யுத்தச் செவ்வாய் சனி குருவை நோக்குவதால் அரசியல், இராணுவ மாற்றங்களையும், புலனாய்வுகளையும், போர் முஸ்தீபுகளையும் உண்டாக்கும். (சத்பாவின்) சனி மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. (19348)

## தவறிவிட்டது

ஆவரங்கால், புத்தூர் என்னும் முகவரியை சேர்ந்த ஆறுமுகம் சசிலேகா என்பவரது தேசிய அடையாள அட்டை (695654669V), விசேட அடையாள அட்டை (0903035764) என்பன 09-06-2003 அன்று வற்றாப்பளையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் (19337)

# கூட்டுறவுச்சபை நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூன்22

கூட்டுறவுச் சபையின் 81ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுப போட்டி, கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, வினாடிவினாப் போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு:-

**பேச்சு**

☆ தரம் 10,11- முதலாமிடம்: சொ.ஹர்சன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: வே.கஜேந்திரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப பாடசாலை), மூன்றாமிடம் ச.கிருத்திகா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம்).

☆ தரம் 12, 13- முதலாமிடம்: ச.தேவனி (கரவெட்டி விக்கினேஸ்வரா பாடசாலை), இரண்டாமிடம்: செ. பிரதீபா (கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

**கட்டுரை**

☆ தரம் 10,11- முதலாமிடம்: கோ.தாட்சாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்: மு. சதீஸா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம்: பா.கார்த்தீபன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

☆ தரம் 12,13 - முதலாமிடம்: கி.கிரிதரன் (யாழ். மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: ஜெ.ஜெயபிரபா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), மூன்றாமிடம்: சு.வினர்ஜிதா (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம்).

**சித்திரம்**

☆ தரம் 10,11 - முதலாமிடம்: க.இராகவன் (யாழ். விக்கினேஸ்வரா வித்தியாலயம்), இரண்டாமிடம் நதர்ஷாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம்: க.பிரேமலதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

☆ தரம் 12,13- முதலாமிடம்: செ.ஜெஸ்ரின்கார்மேலா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்: சீ.சுலோசனா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்: பா. சுரேஸ்கண்ணா (இணுவில் மத்திய கல்லூரி).

**வினாடி வினாப் போட்டி**

முதலாமிடம்: (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்: (பருத்தித்துறை மெதடிஸ் உயர்தர பெண்கள் கல்லூரி), மூன்றாமிடம்: (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

மேற்படி போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்ற போட்டியாளர்கள எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (எ-4)


## தேவை

சாவகச்சேரி நகரில் உள்ள உணவகத்திற்கு, அனுபவமுள்ள சமையலாளர், ரீமேக்கர், சப்ளையர் உடன் தேவை. தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:

ரவி உணவகம்

5, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி. (சி-28503)



## கணிதம் 1&2

கடந்த வருடம் மாவட்ட ரீதியாக நடைபெற்ற தரம் 10 -11 ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்கள் பத்து விடைகளுடன் வெளிவந்துள்ளன.

விலை ரூபா 150/-

தொடர்புகளுக்கு:

Mr. S.KAILANATHAN
30 3/3, Galpotha street,
Colombo - 13.
Tele: 01 448912
0777 179495 (19358)


# ஜப்பான் தூதரகத்தின் உதவியுடன் எட்டுக் கிராமங்களில் பாலர் பாடசாலைகள்

## சர்வோதய இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்22

சர்வோதய அமைப்பு குடா நாட்டில் 8 கிராமங்களில் பாலர் பாடசாலைகளை அமைத்து செயற்படுத்தி வருகின்றது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் நிதியுதவியுடன் இவை செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆவரங்கால், ஊறணி, தம்பசிட்டி, மிருசுவில், மட்டுவில் காக்கைதீவு, வாதரவத்தை, கைதடி ஆகிய கிராமங்களிலேயே இந்தப் பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பாலர் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், புத்தகங்கள் என்பனவும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன எனவும் -

சிறுவர்களுக்கான கலை, கலாசார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் -

சர்வோதயம் நிறுவனத்தின் யாழ். இணைப்பாளர் கே.கனகரட்ணம் தெரிவித்துள்ளார். (எ-4)

# குடாநாட்டு விவசாயிகளுக்கு சுழற்சிமுறையில் தெளிகருவிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்22

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு சுழற்சிமுறையில் வழங்குவதற்கென ஒரு தொகுதி நீர் இறைக்கும் இயந்திரங்களும் மருந்து விசிறும் கைத்தெளிகருவிகளும் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதியும் அவர்களை விவசாய நடவடிக்கையில் மேலும் ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த நீரிறைக்கும் இயந்திரங்களும் கைத்தெளி கருவிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது முதற்கட்டமாக 12 நீரிறைக்கும் இயந்திரங்களும் 127 மருந்து விசிறும் கைத்தெளிகருவிகளும் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை கிராமங்களில் உள்ள விவசாய சம்மேளனங்களூடாக கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இவற்றை விரைவில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கமநல சேவைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (எ-8)


## ஊழியனும் அவனின் ஊழியமும்

உலகப்பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ எழுத்தாளரும் பிரசங்கியாருமான
சகோ.சாம் ஜெபதுரை யாழ்.வருகை.
விசேசித்த கருத்தரங்கு
போதகர்/ஜெபகுழு தலைவர்/தலைமைத்துவத்தில் சேவை புரிவோர்
திகதி: 3,4,5 ஆடி 2003
நேரம்: காலை 9.00 மணிமுதல் 1.30 மணிவரை.
இடம்: அசெம்பிளி ஒவ் கோட், மானிப்பாய்.
நற்செய்தி பெருவிழா இதே ஆலயத்தில்
மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.
வியாதியா? பிரச்சினையா? பிசாசின் பிடியா? சமாதானமில்லையா?
இயேசு இன்று ஆன்மீக விடுதலை தருகிறார்.
பிரவேசம்: இலவசம்
(19363) மேலும் தொடர்புகளுக்கு: ☎ 222 3204



உ

## அச்சுவேலி உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலய இந்து இளைஞர் மன்றம் அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்: நாளை (23-06-2003) திங்கட்கிழமை
பிற்பகல் 4.00 மணி
இடம்: உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலய மண்டபம்
தலைவர்: பாலபண்டிதர் சிவஸ்ரீ
கு.வை.விருத்தகிரீஸ்வரக்குருக்கள்
(சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு)
சிறப்பு அதிதி: கலாநிதி 'அருட்கவி' சீ.விநாசித்தம்பி
(தலைவர், இந்துப்பேரவை, யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்: திரு.எஸ்.ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், கோப்பாய்)
சிறப்புரை: "கலாபூஷணம்" க.நா.கணபதிப்பிள்ளை
(சின்னமணி) J.P.

இந்து இளைஞர்களே! பெரியோர்களே!

அச்சுவேலி வடக்கு/தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குள் வசிக்கும் இந்துக்கள் எல்லோரும் ஒன்றுகூடி எம் ஆலய சூழலுக்கென இந்து இளைஞர் மன்றத்தை அமைத்து இந்துசமய அபிவிருத்திக்கு ஒத்துழைக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

(19368) - அமைப்பாளர்கள்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 * 09 * 1932



மறைவு 03 * 07 * 2002

திதி: ஆனி தேய்பிறை அஷ்டமி
நட்சத்திரம்: ஆனி ரேவதி

"சிவனருட் செல்வன்" சி.வெ. சோமசுந்தரம்

யாழ்நகர் அணிசேய் வண்ணையம் பதியில்
வாழ்உயிர் வைகிய குலமதிற் தோன்றிய
மேல்தகு "சோமு" விண்ணகம் எய்திய
நாளிதில் ஆண்டு ஒன்றா கும்மே

இந்துவின் தாபகர் பசுபதிச் செட்டியார்
மைந்தரின் மைந்தனாம் மேதகு சோம
சுந்தர னாரைத் தூய அன்புடன்
இந்நாளில் நினைவு கூருவமே

411, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
E-mail: niranjan@touchtelindia.net

தகவல்: குடும்பத்தினர்

# ரணில் அரசின் ஆட்சிக்காலத்தில் அகதிகள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

## அகதிகள் தின வைபவத்தில் அமைச்சர் ஜயலத்

கொழும்பு,ஜுன்22

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசே இனப்பிரச்சினையைத் தீர்த்து இடம்பெயர்ந்த அகதிகளை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

நேற்றுமுன்தினம் கொழும்பு உலக வர்த்தக நிலையக் கட்டடத்தில் சர்வதேச அகதிகளுக்கான தினம் நினைவு கூரப்பட்டது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்கள் சுமார் எட்டு லட்சம் பேர் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் பலர் பத்து முறைகளுக்கு மேல் தமது இடங்களை விட்டு வெளியேறிப் பல்வேறு இடங்களில் அல்லற்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சம் இலங்கையர்கள் 111 முகாம்களில் வசிக்கின்றனர். நாம் அவர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றத் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள போதும் அவர்களுடன் பேச்சுமூலம் பிரச்சினைகளுக்கு முடிவு காண்போம். அகதிகள் தொடர்பான பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பல்வேறு தொண்டுகளைப் புரிந்துள்ளது.

வெளிநாட்டில் தஞ்சம்புகுந்துள்ள இலங்கையர்கள் மீண்டும் தாயகம் திரும்பவே விரும்புகின்றார்கள். எமது அரசின் ஆட்சியில் அகதிகள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

வடக்கிலும் - கிழக்கிலும் தமது சொந்த இடங்களை விட்டுச் சென்ற மக்களின் துன்பங்கள் பற்றி நான் நேரில் சென்று அறிந்திருக்கின்றேன். அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அவர்கள் அல்லற்படுகின்றார்கள். அவர்களின் பிரச்சினைக்கு விரைவில் முடிவு காணப்படும் என அவர் மேலும் கூறினார்.

அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதி செல்வி கத்தரின் பிட்ச், செல்வி வல்லாய் பர ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

## வணிகநாதம் மலர் வெளியீடு

வலி.தெற்கு,ஜுன்22

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலை, வர்த்தக மன்றத்தின் 'வணிகநாதம்' சிறப்பு மலர் வெளியீடு நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ப.ராதாகிருஷ்ணசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன முகாமைத்துவத்துறைத் தலைவர் மு.கதிரமலை நூல்வெளியீட்டுரை நிகழ்த்துவார். நூலின் நயப்புரையை கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் சி.சிவகுமாரன் வழங்குவார்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் ச. சிவனேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கௌரவ விருந்தினராகவும் விழாவில் கலந்துகொள்வர்.

(எ-152)

## பரிசளிப்பும் பருவ அறிக்கை வழங்கலும்

யாழ்ப்பாணம்,ஜுன்22

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் இவ்வருடத்தின் மூன்றாவது பரீட்சைக்கான பரிசளிப்பும், பருவ அறிக்கை வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (எ-3)

## கௌரவிப்பு

வலி.தெற்கு,ஜுன்22

மஹோற்சவக் கிரியைகளை சிறப்பாகச் செய்தமையைப் பாராட்டி எழுதுமட்டுவாள் பிரம்மஸ்ரீ க.நாகேஸ்வரக் குருக்கள் தொண்டமனாறு - கெருடாவில் வீரமாகாளி அம்மன் ஆலய இளைஞர்களால் தங்கப்பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (எ-152)

## ராமேஸ்வரம் பகுதியில் ஹெரோயின் சிக்கியது

கொழும்பு,ஜுன்22

தமிழ்நாடு, ராமேஸ்வரப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்திவரப்படவிருந்த 2கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினும் வேறு போதைப் பொருள்களும் தமிழ்நாடு சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டன.

ராமேஸ்வரம் - தனுஷ்கோடி கரையோரப் பகுதியில் நடத்திய ஒரு வேட்டையில் இப்போதைப் பொருள்களைக் கடத்திவர தயாராக இருந்த ஒரு படகை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அப்படகு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தொன்றாகும்.

படகிலிருந்த மூவர் தப்பியோடியுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிக்கத் தேடுதல் நடத்தப்படுகிறது.

## குடிதண்ணீர் விநியோகத்தில் தடை

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள இலந்தைக்குளம், ஆனந்தன் வடலி, கொழும்புத்துறை வீதி ஆகிய இடங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் கடந்த சில நாள்களாகத் தடைப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை சுவாமியார் வீதிச் சந்தியில் தொலைபேசி இணைப்புக் கம்பம் நடுவதற்கு குழிதோண்டப்பட்டபோது நிலத்தடிநீர் விநியோகக் குழாய் சேதமடைந்தமையே இந்தத் தடைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

மேற்படி குழி இதுவரை சீர்செய்யப்படாமையால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீருக்கு நீண்டதூரம் அலைந்து சிரமப்பட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. (எ-30)

## அராலி கிழக்கில் இதுவரை மின்விநியோகம் இல்லை

அராலி கிழக்கு முதலாம் வட்டாரப் பகுதிக்கு மின் விநியோகிக்க இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பகுதியின் சில இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

யுத்த நடவடிக்கைகளையடுத்து சீர்குலைந்த மின் இணைப்புகள் இதுவரை சரிசெய்யப்படவில்லை.

இதனால், இப்பகுதியில் வசித்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கல்வி மற்றும் வெளிச்ச வசதிகள் இன்றி சிரமப்படுவதாகவும் கூறப்பட்டது. (எ-30)

## பாவங்களை அறிக்கை செய்து சமாதானம் பெறுவோம்!



'சமாதானத்திற்குக் காத்திருந்தோம். பிரயோசனமில்லை. ஆரோக்கிய காலத்திற்குக் காத்திருந்தோம். இதோ ஆபத்து' - எரோமியா - 8:15 இவ்வண்ணமாகக் கூறுவதைக் காணலாம்.

சகோதரர்களே!

சமாதானத்திற்கு ஏன் ஆபத்து வருகின்றது. மீண்டும் எரோமியா தீர்க்கதரிசி 8:3இல் கூறுகின்றபடி அவர்கள் பொய்யைப் பிரயோகிக்கத் தங்கள் நாவாகிய வில்லை வளைக்கின்றார்கள். அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்திற்காக அல்ல, பொல்லாப்பில் இருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள். என்னையோ அறியாதிருக்கிறார்கள். ஆம், சமாதானத்தின் தெய்வமாகிய கடவுளை அவர்கள் அறியவில்லை. வேடமாகவே மனிதன் திரிகின்றான்.

சகோ.ச.திருவம்பலம்

எசேக்கியேல் 13:10 சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானமென்று சொல்லி அவர்கள் என் ஜனத்தை மோசம் போக்குகிறார்கள். ஒருவன் மண்சுவரை வைக்கின்றான். இதோ மற்றவர்கள் சாரமில்லாத சாந்தை அதற்குப் பூசுகிறார்கள். சாரமில்லாத சாந்தைப் பூசுகின்றவர்களைப் பார்த்து அது இடிந்துவிழும் என்று சொல் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் காணுகின்றோம். தீர்க்கதரிசிகள் கடவுளின் வாயாக இருந்து உலகுக்கு வரும் காரியங்களை முன்னறிவிப்பவர்களாவர்.

பரிசுத்த திருமறையில் உள்ளபடி நன்மை செய்கிறவன் ஒருவனாகிலும் இல்லை. மனுமக்களாகிய நாம், தீமை செய்ய விரைந்தோடுகிறவர்களாகவே இருக்கின்றோம். சகோதரர்களே!

இரண்டு எஜமானுக்கு ஒருவன் ஊழியம் செய்ய முடியாதென்பது கடவுளின் வாக்காகும். சமாதானத்திற்கும் யுத்தத்திற்கும் மனிதன் ஊழியம் செய்யமுடியாது. எனவேதான் ஆண்டவர் இயேசு சுவாமி கூறுகின்றார், சமாதானம் பண்ணுகிறவர்கள் பேறு பெற்றோர். அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவர். யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகின்றேன். என்னுடைய சமாதானத்தையே உங்

ஞாயிறு நற்பிரசாதம்

களுக்கு வைத்துப் போகின்றேன். உலகம் கொடுக்கிற பிரகாரமாய் நான் உங்களுக்கு கொடுக்கின்றதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக என்றார். உலகம் கொடுக்கிற சமாதானம் எந்நாளும் தத்தளிப்பான சமாதானமாகவே இருக்கும். எனவேதான் எரோமியா தீர்க்கதரிசி 30:5 தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கின்றோம். திகில் உண்டு சமாதானமில்லை. இந்தச் சமாதானத்தைப் பூமியில் தருபவர் யார் என்று உலகமே ஏங்கிக்கொண்டிருப்பதை நாம் காணமுடிகிறது. ☆


### விழியின் மீது விழிப்பாயிருங்கள்

* சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்க சிரமப்படுகின்றீர்களா?
* ஒரு விதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம்.

(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு.)

எம்மிடம் வாருங்கள்! இலவச கண்பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும்; அத்துடன்

* முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
* மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

**எரிக்கணேஷ்**

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் இடமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 - 2486

கிளைகள்:

80, K.K.S. வீதி, சுன்னாகம். 91, K.K.S. வீதி, கொக்குவில்.

(சி-28499)

### இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரைமீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-28353)

### தேவை

[ஓவ் (f) செற் இயக்குநர்]

ஓவ் (f) செற் மெசின் (DAVIDSON) வேலைகள் தெரிந்தவர்கள் 25ஆம் திகதிக்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

☆ பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள் சிறந்தமுறையில் கணனிமூலம் பதித்துக் கட்டிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**ஷாம்பவி பதிப்பகம்**

276, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(19350)

### விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள், பழகவிரும்புபவர்கள் தேவை.

உடனே நேரில் வரவும்.

**த.குமாரசாமி அன் சன்ஸ்**

248/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(19196)

### பஸ் சேவை யாழ். - கொழும்பு

பயணிகள் சொகுசு பஸ் சேவை வாரத்தில் இருமுறை நடைபெறும்.

தொடர்பு:

10/3, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(19269) ☎ 0777 164458

### உளமாரப் பாராட்டுகின்றோம்



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த உயர்திரு.

**நமசிவாயம் இரத்தினசிங்கம்**

அவர்கள் 18.06.2003 அன்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேன்மேலும் சிறக்க இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி. (19342) - ந.பாலசிங்கம்.



உலகப் புகழ் பெற்ற L.G குளிர்சாதனப் பெட்டிகள் Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA

TEL: 021-222-5766

## வர்த்தக நிலையங்களுக்கு மின்சாரம் கிடைக்கும்

சாவகச்சேரி நவீன சந்தையில் இயங்கும் வர்த்தக நிலையங்களுக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

மின்சாரம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம் வர்த்தக நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் இலங்கை மின்சாரசபை சாவகச்சேரி பிரிவினரால் வழங்கப்பட்டது.

யுத்தத்தினால் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட நவீன சந்தை கட்டடத்திற்கு மின்விநியோகம் வழங்குமாறு அண்மையில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் க.கேதீஸவரன் இலங்கை மின்சாரசபையிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும்

# தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குக!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அச்சுவேலி,ஜூன்22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றிய 21 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றியவர்களுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 21 பேருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

நியமனம் பெறுவதற்கு இவர்கள் தகுதியானவர்களாக இருந்தபோதிலும், மத்திய அரசின் கீழ் செயற்படும் தேசிய பாடசாலைகளின் செயறபாடுகளில் மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடியவில்லை.

தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு விசேட நடைமுறையைக் கடைப்பிடித்து நியமனம் வழங்கவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் கோரியுள்ளது என சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

(எ-11)

## சாரணர் வேலைவாரம்

சாவகச்சேரி,ஜூன்22

தேசிய சாரணர் வேலைவாரம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த வேலை வாரத்திற்கான வேலைவார அட்டைகள் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் வைத்து தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் சாரணத் தலைவர்கள் மற்றும குருளைச் சாரணர் தலைவர்களிடமும வலயக் கல்விப்பணிமனை சாரணர் பிரிவு ஆணையாளரால் வழங்கப்பட்டன.

(எ-31)


## அப்பலோ வைத்திய நிலையம்

நடைபெறாது தடைப்பட்டிருந்த கண் சிகிச்சைகள் யாவும் இன்று காலை தொடக்கம் வழமைபோல் நடைபெறுகின்றது. முன் பதிவுகளும் புதிய பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

*குறிப்பு* : சத்திர சிகிச்சைக்கு பதிவு செய்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*T.P.N. 3305,*
*16, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(19380)

- நிர்வாகம்.

## பதவி - வெற்றிடம் "புத்தகப் பண்பாட்டு செயற்பாட்டாளர்"

தேசிய கலை இலக்கியப் பேரவை புத்தகப் பண்பாட்டு நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும் திட்டத்தில் மாதாந்தம் வெளியிடும் நூல்களை மக்களிடம் அறிமுகம் செய்யவும், இலக்கிய நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதற்கும் பிரதேச ரீதியாக புத்தகப்பண்பாட்டுச்செயற்பாட்டாளர்கள் தேவை. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மாதாந்தக்கொடுப்பனவும், இதரபடிகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் 30.06.2003 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விலாசம்:
விநியோகச் செயலர்,
தேசியகலைஇலக்கியப்பேரவை,
405, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 01-381603

(19372)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற ஜா.கோடியல் உற்பத்தி நிறுவனத்துக்கு வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீஸ்ற் தரமான உணவு உற்பத்தி நிறுவனம்
55, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(19377)


## 31 ஆம் நாள் நினைவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 17 - 03 - 1930



மறைவு 24 - 05 - 2003

### அமரர் சிவசம்பு துரைசிங்கம்

(ஓய்வு பெற்ற கிராம சேவகர். இணுவில் மேற்கு)

எமது குடும்பத் தலைவரின் நினைவாக இன்று (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழ்கின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(19374)

அன்புடன்
திருமதி துரைசிங்கம்
குடும்பத்தினர்.


## ஸ்கிரீன் பிறிண்டிங் பயிற்சி வகுப்பு

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் இன்று (22.06.2003) ஞாயிறு முதல் ஆரம்பம்.

பயிற்சிக்காலம் 3 மாதங்கள்

யசோ
35, கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.

(19373)

## TELEVOICE நிறுவன சேவை

யாழ்.மக்களே!

மேசைத் தொலைபேசியை இலங்கையில் அறிமுகஞ்செய்த நிறுவனம்!

TELICA CELULAR இவர்களின் இணை நிறுவனம் இன்று யாழ் நகரில் மேசைத் தொலைபேசி சேவையை தெளிவான சிக்கலில்லாத முறையில் உங்களுக்கு வழங்கி வருகின்றது



TELEVOICE



இரவில் முற்றிலும் இலவசம்

நீங்கள் வீட்டிலிருந்து கொண்டே உறவினர்களுடன் உரையாடி மகிழ வேண்டுமா?

மொபிட்டல் பில் கனெக்‌ஷன் செய்து தரப்படும்

உங்கள் தொடர்புகளுக்கு
டெலிவொய்ஸ் நிறுவனத்தை நாடுங்கள்!

IDD இணைப்பு இலவசம்

0712 - 387043
0777 - 067389

0712 - 340540
0777 - 113663

*13, GRAND BAZAAR,*
*JAFFNA.*

(19360)

எமது கிளை
மோர் ஸ்ரீட், திருகோணமலை,
0712 335597


# செய்திக் கொத்து

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நூலகத்தில் அபிவிருத்தி

சண்டிலிப்பாய்,ஜூன்22

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் இயங்கும் நூலகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதுவரை இந்த நூலகத்திற்கு பதுதுக்கு மேற்பட்டவர்கள் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதேவேளை - இந்நூலகத்தில் நூல்களை இரவல் வழங்கும் பணியும விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

நூலகத்திற்கு புதிய அங்கத்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று நூலகர் தெரிவித்தார்.

(எ-135)

## சிறப்புற நடைபெற்ற ஆத்மஜோதியின் ஜயந்தி விழா

தென்மராட்சி,ஜூன்22

ஆத்மஜோதி நா.முத்தையாவின் 86ஆவது ஜயந்தி விழாவும் அறநெறிப்பாடசாலை ஆண்டு விழாவும் அண்மையில் ஏழாலையில் உள்ள ஆத்ம ஜோதி நினைவாலய மண்டபத்தில் நா.முருகையா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அமைச்சின் உதவிச் செயலாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆத்மஜோதியின் ஜயந்தி தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், இப்பகுதி பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(எ-117)

## சனசமூக நிலையம் இதுவரை புனரமைப்பு இல்லை

கடந்த போர்க்கால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த சிறுவிளான் ஞானோதய சனசமூக நிலைய கட்டடம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனை புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நிலைய நிர்வாகம் வலி தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் வேண்டுகோள்விடுத்துள்ளது.

(எ-135)

## நீதிவான்களுக்கு இடமாற்றம்

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் க.அரியநாயகம் பருத்தித்துறை நீதிமன்றத்துக்கும், பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் அ.பிரேமசங்கர் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கும் எதிர்வரும ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

## கரம்பகம் கோட்டத்தில் 2ஆயிரம் தென்னை மரங்கள் அழிப்பு

படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் கரம்பகம் தோட்டத்தில் நின்ற 2ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சபையின் பளைப் பிரதேச பொறுப்பதிகாரி சு.தவரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இடம்பெயர்வு வேளையில் இந்தத் தோட்டத்தில் பறிக்கப்பட்ட தேங்காய்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிககப்பட்டு ஒரு வருடத்திற்கு பின்னர் அண்மையில் தோட்டத்தை பார்வையிடச் சென்ற சபை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்ததாகவும்-

அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-117)

## ஓதுவார்கள் கௌரவிப்பு

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கம் தென்மராட்சிப் பகுதியிலுள்ள ஓதுவார்கள் மூவருக்கும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தது.

இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானை முருகமூர்த்தி கோயில் மண்டபத்தில் ஆசிரியர் எஸ். சதாசிவம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஓதுவார்களின் செயற்பாடுகள் பற்றி சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் வ.கைலேஸ்வரன், ஓய்வுபெற்ற அதிபர் செ.சபாரட்ணம் உட்படப் பலர் உரையாற்றினர்.

தம்பு இராமலிங்கம், முத்துவேலு தியாகராசா, மயில்வாகனம் கந்தையா ஆகிய மூன்று ஓதுவார்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

(எ-10-31)

## முன்பள்ளி விளையாட்டு விழா

அத்தாய் விநாயகர் முன்பள்ளியின வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை தலைவர் கே.புவனேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.(எ-11)

## கட்டுரைப் போட்டி

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தினால் கட்டுரைப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியானது எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(எ-10-49)

# மரண அறிவித்தல்கள்

## சந்தியா சவரிமுத்து (துரையப்பா)

சில்லாலை, செட்டிக்குறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிபபிடமாகவும் கொண்ட சந்தியா சவரிமுத்து (துரையப்பா) நேற்று (21.06.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் லூர்தம்மாவின் அன்புக் கணவரும் ஜயாத்துரை, றீற்றா, டெய்சி, றோகன் (கொழும்பு), சறோஜினி, பாஸ்கரன் CBSL அலுவலர்,(ஊர்காவற்துறை, செட்டிக்குறிச்சி), ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சில்லாலை,*
*செட்டிகுறிச்சி,*
*பண்டத்தரிப்பு.*

(19375)

தகவல்:
ஜோர்ஜ் பாஸ்கரன் (மகன்)

## கிருஷ்ணபிள்ளை நவரத்தினம் (வன்டா)

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய கிருஷ்ணபிள்ளை நவரத்தினம் (வன்டா) அவர்கள் 20.06.2003வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் ரூபி, சாந்தி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கனகம்மா, பத்மாவதி, செல்வரத்தினம், அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.*

(19371)

தகவல்:
கி.செல்வரத்தினம்
(சகோதரர்)

| | | | |
|---|---|---|---|
| சந். | | ராகு வெ. | புதன் சூ சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 22-06-2003 - 28-06-2003

### மாற்றம்:

22-06-2003 உத்தரட்டாதி மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.

கருத்து வேற்றுமை உருவாகும். விட்டுக்கொடுக்கும் மனோபாவம் இல்லையாயின் எந்தப் பிரச்சினையும் எவராலும் எப்பொழுதும் தீர்க்க முடியாது. பிரச்சினைகளை உருவாக்குவது யார்? என உலக நாடுகள் புரிந்துள்ளதை எந்தப் புத்தி ஜீவிகளும் மறுக்கமாட்டார்கள். சமாதானப் பேச்சுக்கள் தொடர வழிபிறக்கும். எந்த நோக்கிலும் தேர்தல் யோசனைகள் உருவாகலாம். உலக நாடுகள் புதிய அழுத்தங்களைச் செய்யும். இந்தியா பல உதவிகளைச் செய்யும். மத்திய கிழக்கில் ஈரான் - ஈராக் மீது புதிய யுத்தம் தொடங்கும். இந்துசமுத்திர காற்றமுக்கம் அதிகரிக்கும். பசுபிக் சமுத்திரநாடுகளில் புதிய வன்முறைகள் அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனிதர்களுக்குள் மனவேற்றுமை தொடங்கி கருத்து வேற்றுமையாகி, பல பிரச்சினைகள் உருவாகக் காரணமாக உள்ளது. தொழில்ஸ்தானத்தில் வருமானம் வந்தாலும், சிலரால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். வீடுமனையில் சிறப்பு வரும். குடும்பத்தில் புத்திரராலோ, சகோதரத்தாலோ பல பிரச்சினைகள் உருவாகும். கடன் பழு அதிகரிக்கும். அயலவர்கள் தூற்றுவார்கள். தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவார்கள். வயிற்றுநோ, கைகால் உளைவு கொடுக்கும். பாதுகாப்புத்துறை மற்றும் வியாபாரிகள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### இடபம்

நீண்டகால இலாபங்களை நாம் தற்பொழுது கருத்தில் கொள்ள முடியாது. தொழில்ஸ்தானத்தில் பொருள் வரவு குறைவடையும். கடன்படுவீர்கள். வீடு வாகன வசதிகள் வரும். அரச உதவிகள் கிடைக்கும். காலில் காயங்கள் வரலாம். அல்சர், நெஞ்செரிவு, விறைப்புக் கொடுக்கும். சங்கீதம், ரீ.வி., டெக் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரிகள், மருந்துவத்துறையினர் மற்றும் குருத்துறையினர்களுக்கு பொருள்வரவு, தொழில் சிறப்பு ஏற்பட வழிபிறக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

தேர்தல் ஒன்று வரும்போல இருக்கிறது என யோசிக்கிறீர்களா? சவப்பெட்டி நாடாளுமன்றத்திற்கு சென்றதுடன் அடுத்த குழந்தை (தேர்தல்) வரும் சாத்தியம் உண்டு எனப் புரிகின்றதல்லவா? இடமாற்றம், பிரயாண வசதிகள் கிடைக்கும். பிறர் உதவியை நாடி நிற்பீர்கள். எதிர்ப்பாலார் வசைமாரி பொழிவர். நாரிநோ, வயிற்றுக் குழப்பம் என்பன வரும். பிரயாணத்துறை, செய்தித்துறை, சந்தைத்துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### கடகம்

உண்மை - நேர்மையற்றவர்களுக்கு எப்பொழுதும் விடிவு வராது. தொழில்ஸ்தானத்தில் கலக்கம் வரும். இனஜன ஆதரவு இருக்கும். அரச உதவிகள் கிடைக்கும். பொருள் வரவு இருக்கும். இடமாற்ற யோசனை வரும். தெய்வபக்தியுள்ளவர்கள் உதவிகள் செய்வார்கள். கால் வருத்தம், தலை வருத்தம் ஏற்படும். குருத்துறை, அரசியல் துறை, பாதுகாப்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள். கொடுத்த கடன்கேட்டுப் பிரச்சினைப்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

திருமணப் பொருத்தத்தில் சில சோதிடர்கள் இலக்கின பாவத்திற்கு மட்டும் தோஷம் பார்க்கிறார்கள். இது தவறானதாகும். உயிர் பாவத்திற்கே இலக்கின பாவம், தோஷத்தைக் காட்டும். ஆண் உயிர்களுக்கும் பெண் உயிர்களுக்குமா திருமணப் பொருத்தம் பார்ப்பது? பொருத்தமற்ற வாழ்வு, பொருத்தமற்ற தொழில் வாழ்வில் பல துன்பங்களைச் சிலருக்கு கொடுக்கின்றது. தொழிலில் பகை உணர்வு ஏற்படும். இடமாற்றம் அல்லது புதிய பொறுப்புக்கள் கொடுக்கும். பொருளொன்று தவறும் கவனம். தூரத்துச் செய்திகள் மகிழ்ச்சி தரும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். நாரி நோ, சலவருத்தம், சளி கொடுக்கும். குருத்தொழில், சந்தை, வியாபாரம், உலோகத் தொழில் சிறப்புக்கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### கன்னி

இலக்கின பாவம் (லக்கின பாவம்) உயிர்ப்பாவம், சந்திர இராசிப் பாவம் அரை மடங்கு உடல்பாவ தோஷத்தைக் காட்டும். இதை பொருத்தம் பார்ப்பவர்கள் கவனத்தில் கொள்ளவும். உங்கள் தொழில் ஸ்தானத்திலும் பாவம், பழி பார்த்து தொழில் செய்யமுடியாது. பண வரவு கொடுக்கும். உறவினர் கலக்கம் தருவர். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு வரும். இலாபம் அதிகரிக்கும். நண்பர்களின் உதவி வரும். வாய்வுத் தொல்லை, நாரி உளைவு கொடுக்கும். செய்தித் தொடர்பு, பிரயாணத்துறை, தோட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### துலாம்

உணர்வுப் பொருத்தம் சுக்கிரன் (வெள்ளியை) வைத்து கால் (1/4) பாவதோஷ கிரக சாங்கிகளைத் தரும். இவை மூன்று நிலையில் பாவதோஷம் ஆண், பெண்ணுக்கு திருமணப் பொருத்தத்தில் பார்க்கப்பட வேண்டும் அல்லது பிழையானதாகும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் உருவாகும். பணவரவு கொடுக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். மாணவர்களுக்கு நன்மைகள் வரும். இடமாற்றங்கள் சகஜம். அயலவர்கள் உதவி செய்வார்கள். வாகனசுகம் கிடைக்கும். நாரிநோ, தோல்வருத்தம், சளி வருத்தம் கொடுக்கும். குருத்தொழில், பாதுகாப்பு, சட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

மனித உயிர், உலகிலுள்ள அத்தனை உயிர்களுக்கும் - பாவதோஷம் உண்டு. சூரிய சந்திரனின் ஆளுமைக்குட்பட்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் பாவதோஷம் உண்டு. இதைப் போக்க, குறைக்க தெய்வ வழிபாடு செய்து வரவேண்டும். பொருள் இழப்புகள் தொழில்ஸ்தானத்தில் கொடுக்கும். மாணவர்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் சகஜம். நெஞ்சு நோ - வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். நகைத் தொழில், பிரயாணத்துறை, சட்டத்துறை, தொழில்நுட்பத்துறை, இரும்பு வியாபாரம் என்பன போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள். புதன், வெள்ளி.*

### தனுசு

செவ்வாயால் ஏற்படும் பாவம் ஏனைய கிரகங்களின் பாவ தோஷத்திற்கு சாந்தியாகாது. ஆனால், குரு பார்த்தால் செவ்வாய் தோஷம் அற்றுப் போகும். செவ்வாய் உண்மையில் தோஷம் உடையதா என அறிவது முதல் கடமையாகும். தொழில்ஸ்தானத்தில் பலர் துன்பம் தந்தாலும் குருவைப் போன்று ஒருவர் இருந்து உங்களைக் காப்பாற்றுவார். நண்பர்கள் உதவிசெய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் பலர் சதி செய்வார்கள். தூரத்துச் செய்திகள் காலதாமதத்தை கொடுக்கும். புத்திரர் உதவி சிறப்புத் தரும். பொருள் வரவு ஏற்படும். மாணவர்களுக்கு நன்மை கிடைக்கும். கால் விறைப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். பிரயாணத்துறை, சட்டத்துறை நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

கிரகபாவம் எதனால்? எப்படி?ஒருவருக்கு வருகிறது என அறிய வேண்டும். தொழில்ஸ்தானத்தில் ஒருவருக்கு அநியாயமாக தீமை, உடல், உயிர், மனப் பாதிப்புக்களைச் செய்து வருவதும் பாவச்செயலாகும். உங்கள் தொழில் ஸ்தானத்திலும் சில பாவ காரியங்களைச் சிலர் செய்து வருவர். நண்பர்கள் துரோகம் செய்து ஏமாற்றுவார்கள். இடமாற்றங்கள், பொருள் செலவுகள் அதிகரிக்கும். தூரத்திலுள்ள உறவினர்கள் செய்தி அனுப்புவர். மாணவர்களுக்கு இடம்மாற்றம் கொடுக்கும். மனப்பயம், கால்வருத்தம், சளித்தொல்லை கொடுக்கும். கடற்றொழில், குருத்தொழில் போன்றோருக்கு சிறப்பு வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

## மகாதேவா ஜோதிடம்

### கும்பம்

தன்தன்சுய லாபத்தைத் தான் அநேகர் கருத்தில் கொண்டு செயற்படுகிறார்கள். ஒரு சில விதிவிலக்கானவர்களால் பலர் நன்மை அடைகின்றார்கள். அடிக்கடி ஆத்திரப்படுவீர்கள். தூரத்து உறவு முறையினர் வருவர். அந்நியர்கள் உங்கள் உதவி நாடிச் செயற்படுவார்கள். பொருள் செலவு கட்டுமீறும் வாகனச் செலவு அதிகரிக்கும். கால், நாரி உளைவு, வாய்வுத் தொல்லை கொடுக்கும். குருத்துறையினர், அச்சு, கணனி, போட்டோப் பிரதித்துறையினர் அதிக நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### மீனம்

எச் செயலிலும் தோல்வி அடைவது இலகுவானதாகும். ஆனால், வெற்றி அடைவது என்பது சுலபமானதல்ல. முயற்சியால் உயர்ச்சி கொடுக்கும். பணவரவு ஏற்படும். இடமாற்றங்கள் சகஜம். மாணவர்கள் நன்மை அடைவர். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் வரும். சளித் தொல்லை, சலவருத்தங்கள் கொடுக்கும். குருத்துறை, சந்தை வியாபாரம், மருந்து தொடர்பான தொழில், பலசரக்கு வியாபாரம் சிறப்புத் தரும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

☆

## நொத்தாரிஸ் பரீட்சையில் நல்லூரில் 5 பேர் சித்தி

வலி.வடக்கு,ஜூன்22

நொத்தாரிஸ் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றவர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின்படி நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஐந்து பேர் சித்தியடைந்துள்ளதாக பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:-

கனகரெட்ணம் கணேசவேல், செல்வி சிதம்பரநாதன் பிரியதர்சினி, முத்துக்குமாரசாமி சிவபாக்கியம், ச. சதாசிவஐயர், செல்வி. சதாசிவஐயர்.

(எ-86)

## சர்வோதயத்தில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூன்22

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் சர்வோதய அமைப்பினால் மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடத்தப்பட்ட விவசாய பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

'மொபிமெண்டோ' அமைப்பின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இப்பயிற்சிகளில கலந்துகொண்டவர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சுண்டுக்குளியில் அமைந்துள்ள சர்வோதய தலைமையகத்திற்கு வந்து தமக்குரிய கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறு சர்வோதய யாழ். இணைப்பாளர் கே.கனகரட்ணம் அறிவித்துள்ளார்.

(எ-4)




# ஜூன் 27இல் தமிழர் உரிமைக் கோஷம் உலகின் முற்றத்தில் ஒலிக்குமா?



# மற்றொரு எழுச்சிக்கு தயாராகின்றது குடாநாடு

மீண்டும் ஒரு மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு தயாராகிக்கொண்டிருக்கின்றது யாழ். சமூகம்.

நாட்டின் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அபிலாசைகள் - மனவிருப்புகள் - எதிர்பார்ப்புகள்- ஏமாற்றங்கள் - ஆதங்கங்கள் அனைத்தையும் மீண்டும் ஒரு தடவை சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் எடுத்துரைப்பதற்கு குடாநாட்டு மக்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன், குடாநாட்டிலுள்ள மாணவர், பொது அமைப்புக்களும் இணைந்து இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

எதிர்வரும் 27ஆம் திகதி இந்த எழுச்சி நடைபெறப்போகின்றது.

ஆயிரக்கணக்கில் மக்களை ஒன்று திரட்டி ஒருமித்த குரலில் எமது உரிமைகளைக் கேட்பதற்கு ஏற்பாடுகள் பலவும் முழுவீச்சுடன் செய்யப்படுகின்றன. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் - குடாநாட்டில் இராணுவ அடக்குமுறைகள் - அச்சுறுத்தல்கள் என்பன பெருகியிருந்த காலப் பகுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட 'துணிகரப்புரட்சி' பொங்கு தமிழ் வடிவில் வீறு கொண்டெழுந்தது. இந்த நாட்டின் ஒட்டுமொத்த தமிழ் மக்களினது அபிலாசைகளை உலக அரங்கிலே ஓங்கி ஒலித்தது பொங்கு தமிழ்.

கடந்த இரண்டரை தசாப்த காலமாக நடைபெற்று வந்த கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான ஒளிக்கீற்று துளிர்விடத் தொடங்கியமைக்கான பின்னணிக்காரணங்களில் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வுக்கும் கணிசமான - காத்திரமான பங்களிப்பு உண்டு என்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

அந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த 'பொங்குதமிழ்' நிகழ்வு மீண்டும் ஒருதடவை யாழ். மண்ணில் எழுச்சி கொள்ளப்போகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொது மக்களின் வீடுகள், காணிகளில் தங்கியுள்ள படையினர் அங்கிருந்து விலகி அவற்றை உரியவர்களிடம் கையளிக்க வேண்டும். உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வலி. வடக்கின் பெரும்பகுதி நிலப்பரப்பு மக்களின் மீள் குடியமர்வுக்கு விடப்பட வேண்டும். மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு தடையாக இருக்கின்ற விடயங்களை நீக்கி அவர்களது இயல்பு வாழ்க்கைக்கு வழி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த முற்றபொங்குதமிழ் எழுச்சி நடைபெறப்போகின்றது.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த மக்கள் எழுச்சியின் அவசியம் - அதன்தேவைப்பாடு குறித்து இங்கு நோக்குவது அவசியமானதாகும்.

கடந்த இரண்டரை தசாப்த காலமாக இந்த நாட்டிலே பெரும் யுத்தம் ஒன்று கொழுந்துவிட்டெரிந்தது. தென்னிலங்கைப் பேரினவாதிகளால் தொடர்ச்சியாக எண்ணெய்விட்டு வளர்க்கப்பட்டுவந்த இந்தக் கொடிய நெருப்பிலே தமிழ் தாயகப்பகுதிகள் சுடுகாடாக மாறின.

காலத்துக்குக் காலம் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்ததுடன், அகதி முகாம்களில் அடிப்படை வசதிகள் உரியமுறையில் கிடைக்காமையில் பெரும் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் தமிழர்கள். சமாதான முரசம் கொட்டியவாறு ஆட்சிப் பீடம் ஏறிய ஐக்கிய தேசிய முன்னணி, தமது அகதிவாழ்வுக்கு இனியாவது முடிவு கட்டும் என்று எண்ணியிருந்தவர்களுக்கு ஏமாற்றமே எஞ்சியது.

சமாதான காலப்பகுதியிலாவது தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழமுடியும் என்று எண்ணியிருந்தவர்களுக்கு அத்தகைய சூழல் ஏற்படுத்தப்படவில்லை.

தமது சொந்த மண்ணில் சுதந்திரமாகத் தொழில்புரிந்து, உறவுகள், சுற்றங்கள் ஒன்றாகக் கூடி நிம்மதியாக வாழ்ந்த மக்கள் இன்று அகதிமுகாம்களிலும் பிறருடைய காணிகளுக்குள்ளும் உறவுகள்-சுற்றங்களைப் பிரிந்து, தொழிலின்றி நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களது பிரதேசங்கள் இப்பொழுது உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசாங்கப் படைகளால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. வலி.வடக்கில் பெரும்பாலான மக்களின் பிரதான தொழில்களான மீன்பிடி, விவசாயம் என்பன அப்பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

தமது சொந்த நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் இப்பொழுது வேறொருவரது நிலத்தில் கூலிக்கு வேலை செய்கின்றார்கள். காங்கேசன்துறை, மயிலிட்டி பிரதேசங்களின் வளம்மிக்க கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.

வலி. வடக்கெங்கும் பரந்து கிடந்த பனைவளம் ஆக்கிரமிப்பாளர்களினால் திட்டமிட்டு அழிக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாறாகத் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக தமிழர் தாயகத்திலுள்ள தொழில் வாய்ப்புக்களை முடக்குவதற்கு அரசும்; அரசபடைகளும் பல திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்றன.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் உரிய தொழில் வாய்ப்புக்கள் எதுவும் இன்றி அல்லற்படுகின்றார்கள். வறுமை அவர்கள் மத்தியில் தலைவிரித்தாடுகின்றது. இதனால் சிறுவர்கள் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றார்கள்.

நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மத்தியில் கட்டாயக் கல்வித்திட்டத்தை அரசு அமுல்படுத்தியிருக்கின்றது. ஆனால், தமிழர் தாயகத்தில் சிறுவர்கள் தமது கல்வியை இடைநிறுத்துவதற்கான அடிப்படைக்காரணங்களைக் கவனத்தில் எடுப்பதற்கு அரசு தவறிவிட்டது.

வடக்கு - கிழக்கின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்று திரும்பத் திரும்பக்கூறிக்கொண்டிருக்கும் தரப்பினர் அவ்வாறு கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்குரிய பிரதான காரணங்களை அரசாங்கத்திற்கு எடுத்து விளக்கவேண்டும்.

ஏராளமான பாடசாலைகள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் (உயர்பாதுகாப்பு வலயத்தில்) காடுமண்டிப்போயிருக்கின்றன. அந்தப்பாடசாலைகளை மீண்டும் இயங்கச்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் பெருமளவு சுகாதார சீர்கேடுகளையும் எதிர்கொள்கின்றார்கள். மலேரியா-போன்ற தொற்று நோய்கள் அகதிமுகாம்களில் வாழ்வோர் மத்தியிலேயே அதிகளவில் பரவிவருகின்றது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

குடாநாட்டில் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு இலவச குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை வழங்கி வந்த ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (G.T.Z) கடந்த ஜனவரி முதல் அந்த நீர் விநியோகத் திட்டங்களை நிறுத்தியிருக்கின்றது. இதனால் அவர்களுக்கு இப்பொழுது மேலும் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களுக்கென அரசாங்கம் வழங்கி வருகின்ற நிவாரணப் பொருள்கள் அவர்களுக்கு போதுமானதாக இல்லை.

ஒருமாதத்துக்கென வழங்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் பல குடும்பங்களுக்கு ஒருவார காலத்துக்குக் கூடப் போதாமல் இருக்கின்றது.

'எம்மை எமது சொந்த மண்ணில் குடியமர்த்தி அங்கு சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதித்தால் எங்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கத் தேவையில்லை. அப்போது வேண்டுமானால் அரசுக்கு நாங்கள் நிவாரணம் வழங்குவோம்' என்று உறுதியாகக் கூறுகின்றார்கள் தமிழ் மக்கள்.

இது ஒருபுறமிருக்க மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் பொதுமக்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான வீடுகள், காணிகளில் படையினர் முகாமிட்டிருக்கின்றார்கள். அத்தகைய இடங்களிலுள்ள படையினரை அங்கிருந்து விலக்கி பொதுமக்களின் வீடுகளையும், காணிகளையும் உரியவர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச தரப்பில் பல தடவைகள் கூறப்பட்டு வந்தாலும், இதுவரையில் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.



சில பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களை அண்டியதாக பல வீடுகளை தொடராக இணைத்துப் படைமுகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பாதுகாப்புக்கென பல வீதிகள் பொதுமக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான வீடுகள், காணிகளில் இருந்து இதுவரை படையினர் வெளியேறவும் இல்லை. அவை உரியவர்களிடமும் கையளிக்கப்படவுமில்லை.

கடந்த காலங்களில் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தங்கியுள்ள மக்கள் தற்போதைய சமாதான சூழலில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்காக மீண்டும் இங்கு வந்துகொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறு வருகின்ற பலரும் இங்கு தமது வீடுகளில் அரச படைகளின் முகாம்கள் அமைந்திருப்பது கண்டு எதிர்த்துக் கதைப்பதற்கு திராணியற்றவர்களாய் மீண்டும் தாங்கள் தங்கியிருந்த இடங்களுக்கே திரும்பிச் செல்கின்ற கொடுமைகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறு பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மக்களின் அவலங்களுக்கு முடிவு கட்டப்படவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது. இந்தத்தேவையை வலியுறுத்தியே எதிர்வரும் 27ஆம் திகதி 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு இடம்பெறவிருக்கின்றது. இம்முறை 'பொங்குதமிழ்' நிகழ்வின் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்குவதற்குரிய ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச தலையீடுகள், அழுத்தங்கள அதிகரித்துக்கொண்டு போகின்ற இந்த வேளையில், எமது பக்க நியாயங்களை உலகறியச் செய்ய வேண்டியதும் இன்றைய தேவையாக உள்ளது.

தென்னிலங்கை சக்திகளின் சர்வதேச பொய்ப்பிரசாரங்களை முறியடிப்பதற்கு பொங்குதமிழ் சிறந்த ஊடகமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு வெளிநாடு பலவற்றின் தூதரகங்களுக்கும் ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், வெளிநாட்டுத் தரப்புக்களை இதில் கலந்து கொள்ளாமல் செய்வதற்கும் சில தீயசக்திகள் திரைமறைவில் சதிசெய்து கொண்டிருப்பதும் தெரியவந்து கொண்டிருக்கின்றது.

எது எப்படியிருந்தாலும் வெளிநாட்டுத்தூதுவர்களை பொங்கு தமிழில் பங்கேற்கச் செய்வதில் ஏற்பாட்டாளர்கள் உறுதியுடன் செயற்பட வேண்டும்.

அதே நேரம் இப்பொங்கு தமிழ்' நிகழ்வின் குடாநாட்டு மக்கள் அனைவரும் உணர்வெழுச்சியுடன் பெருந்திரளாகப் பங்கேற்பதன் மூலம், எமது விருப்பங்கள், அபிலாசைகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் அனைத்தையும் சர்வதேசத்துக்கு எடுத்துரைக்க வேண்டும்.

சிங்களத்தரப்புகளிடமிருந்து நாங்கள் கேட்பதெல்லாம் எங்களுக்கு முட்கம்பிவேலி இல்லாத கடற்கரை வேண்டும். காவலரண்களற்ற தெருக்கள் வேண்டும். தடைகள் அற்ற சுதந்திரம் வேண்டும். நிம்மதியாக படுத்துறங்க எங்கள் வீடுகள் வேண்டும் என்பதுதான்.

இப்பொழுது கேட்கிறோம். தர மறுத்தால்...... தட்டிப்பறிப்போம்.

**அற்புதன்**



## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜூன்22

எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.30 மணிக்கு யாழ். கோவில் வீதி இல.40. என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பணிமனையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்தகொள்ளுமாறு ஒன்றியத்தின் இணைச் செயலாளர் எஸ்தர்மரெட்ணம் கேட்டுள்ளார் (எ-10)

★ ★ ★

சாவகச்சேரி, ஜூன்22

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம சேவை அலுவலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் சகல கிராமசேவை அலுவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் கதேதீஸ்வரன் கேட்டுள்ளார். (எ-31)

# உரிமைகள் கிடைக்கும் வரை "பொங்கு தமிழ்" பொங்கிக் கொண்டே இருக்கவேண்டும்

## யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்22

கடந்த காலங்களில் தமிழீழ மக்களின் உணர்வுக்கும், எழுச்சிக்கும், ஒற்றுமைக்கும் புடம்போட்ட 'பொங்கு தமிழ்', உரிமை கிடைக்கும் வரை பொங்கிகொண்டே இருக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து விடுத்த அறிக்கையில் ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

சிங்கள அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி 16 மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக்காலப் பகுதியில் சமாதானத்தின் பெயரால் புலிகள் இயக்கம் எத்தனையோ விட்டுக்கொடுப்புக்களை பொறுமையுடன் செய்துள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கைக்காகவே அவையெலலாம் செய்யப்பட்டன என்பது பகிரங்க உண்மையாகும்.

ஸ்ரீலங்கா அரசு உடன்பட்டது போல மக்கள் வாழ்விடம், கோவில்கள், பொது இடங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் இருந்து படைகளை விலக்கப்படவில்லை. அங்கே மக்களின் மீள்குடியேற்றம், இதுவரை நடைபெறவில்லை. மாறாக அகதி வாழ்வும், அவல வாழ்வும் தான் தொடர்கிறது.

உடன்பாடு காணப்பட்டு மூன்று மாதங்களுக்குள் இவை அனைத்தும் நடைபெற்றுவிடும் என்று அரசு உறுதியளித்திருந்தது. 16 மாதங்கள் கடந்த நிலையிலும் அவை பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை.

எனவேதான் பேச்சுக்களிலும் ஜப்பான் நிதி மகாநாட்டிலும் கலந்து கொள்வதில்லையென புலிகள் முடிவுசெய்தனர். உண்மையிலே இது வரவேற்புக்குரிய தீர்க்கதரிசனமான முடிவென்பதை நாம் எல்லோரும் ஏற்றுநிற்கும் இவ்வேளையில், தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதியானதும், கௌரவமானதுமான அரசியல் பேச்சுக்கள் மூலமாக அமைதி வழியில் அரசியலில் தீர்வுதேடும் நோக்குடன் சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் நேர்மை யாகவும் உண்மையாகவும் மனசுத்தியுடன் உழைக்க வேண்டுமென்பதை கோடிட்டுக்காட்ட யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் முன்வந்துள்ளமை மிகவும் வரவேற்புக்குரியது.

கடந்த காலங்களில் தமிழீழ மக்களின் உணர்வுக்கும், எழுச்சிக்கும், ஒற்றுமைக்கும் புடம்போட்ட 'பொங்கு தமிழ்' உரிமை கிடைக்கும் வரை பொங்கிகொண்டே இருக்க வேண்டும்.

அந்த வகையில் யாழ். மாவட்ட மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற பொது நிறுவனங்களின் ஒன்றியமாகிய நாமும் எமது துறைசார்ந்த அமைப்புக்களும் இணைவோம். இணைந்து செயற்படும் மக்களின உணர்வுகளை அணிதிரட்டுவோம்.

தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணயம் வேண்டிபோர்கொடி எழுப்புவோம்.

இந்நிகழ்வு சம்பந்தமாக அனைத்து ஏற்பாடுகளை பொது நிறுவனங்களினூடாக பொது மக்களுக்கு சென்றடைய அனைத்துப்பொது அமைப்புக்கும் பொறுமையுடன் செயல்படுத்துமாறு வேண்டிநிற்கின்றோம் என்றுள்ளது.

## வினைத்திறன[illegible] காண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 22

அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை, அங்கீகரிக்கப்பட்டுள்ள பிற சேவைகள், சிறாப்பர் சேவை, கணக்குப் பதிவுநர் சேவை ஆகியவற்றில் உள்ளவர்களுக்கும்-

தட்டெழுத்தாளர் சேவையில் வகுப்பு II 'அ' பிரிவில் உள்ளவர்களுக்கும், சுருக்கெழுத்தாளர் சேவையில் தரம் II இல் உள்ளவர்களுக்குமான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9.30 மணிமுதல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## நூல் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய்,ஜூன்22

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி ஏழாலை மு.கந்தையா அவர்களின் முதலாம் ஆண்டு திதியை முன்னிட்டு அன்னார் எழுதிய "சித்தாந்த ஞானக்களஞ்சியம்" என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை ஏழாலையில் நடைபெறவுள்ளது.

பண்டிதமணி மு.க. நூல்வெளியீட்டு கழகத்தலைவர் ஆ.விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார். சிறப்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நிகழ்த்துவார். கலாநிதி இ.முருகையன் நூல் வெளியீட்டுரையையும், யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தலைவர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் நூல் ஆய்வுரையையும் நிகழ்த்துவர். பண்டிதமணி மு.கவின் நூற் கண்காட்சியும், அறிமுகமும் தொடர்ந்து இடம்பெறும். (எ-135)

# புலிகள் பேச்சுக்கு வருவார்கள் என பீரிஸ் நம்பிக்கை தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 22

அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் தற்போது தடங்கல்கள் ஏற்பட்டபோதும் இந்தத் தடங்கல்கள் நீங்கி விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அரசமைப்பு விவகார அமைச்சரும், சமாதானப் பேச்சுக்குழுவின் தலை வருமான ஜி.எல்.பீரிஸ்.

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள இலங்கை - ஜப்பானிய நிறுவனத்தின் கூட்டு இணைப்பில் இயங்கும் டோக்கியோ சிமெந்து ஆலையில் சுமார் 75 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன இயந்திரத்தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் ஆரம்பவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட நிதியின் மூலம் வடக்கு - கிழக்கிற்கான புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அது விடுதலைப் புலிகளின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனுமே மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மேலும்தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் கோரியுள்ள செயற்பாட்டு நிர்வாகம் கொண்டதான இடைக்கால நிர்வாகம் பற்றியோ அன்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ள கடிதம் பற்றியோ அமைச்சர் எதுவும் தெரிவிக்கவில்லை . ( ம-5)

# காரைநகர் வணிகர் கழகம் ஆதரவு

காரைநகர்,ஜூன்,21

சர்வதேச சமூகத்திற்கு எமது உணர்வுகளை எடுத்துரைக்க தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்வோம்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது காரைநகர் வணிகர் கழகம். இது தொடர்பாக வணிகர்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 25 ஆண்டுகாலமாக எமது சொந்த மண்ணை ஆக்கிரமித்திருக்கும் எதிரிகளுடனான ஒரு நியாயமான மண்மீட்பு போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வருவது நாம் அனைவரும் அறிந்ததே

இப்போராட்டத்தில் தமிழர்களாகிய நாம் விலைமதிக்க முடியாத உயிர்களையும் சொத்துக்களையும் இழந்துள்ளோம். எனவே, தமிழர்களாகிய நாம் எமது சுதந்திர உணர்ச்சியைக் காட்டும் முகமாக பொங்கு தமிழ் நிகழ்வினை செய்து வருகின்றோம்.

எனவே, எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்விற்கு தமிழ் பேசும் அனைத்து மக்களும் உணர்ச்சிபூர்வமாக கலந்து தங்கள் பூரண ஆதரவைக் கொடுத்து உலகுக்கு எமது ஒற்றுமையையும் சுதந்திர வேட்கையையும் எடுத்துக்காட்ட வேண்டும் - என்றுள்ளது. (ம-73)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,ஜூன்22

நாட்டு மக்களின் நலம் வேண்டி-மீசாலை திருநீலகண்ட வெள்ளமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் 13 ஆவது 'மகா கணபதி ஹோமம்' இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (10-31)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூன்22

அராலி கிழக்கு முத்துமாரி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (10-30)

# பெண்களின் விடுதலையை பெண்களே தீர்மானிக்க வேண்டும்

## கேணல் கருணா தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்22

பெண்களின் விடுதலையை பெண்களே தீர்மானிக்கவேண்டும் என விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண்கள் எழுச்சி தொடர்பான மகளிர் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கருணா இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்ததுடன் சமூகத்தில் பெண்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் விரிவாக விளக்கினார்.

இதனைத்தொடர்ந்து இதில் கலந்து கொண்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

தாம் ஆண்களுக்கும் சமமாக சகல செயற்பாடுகளிலும் ஈடுபடஉள்ளதாகவும், எதிர்காலத்தில் தாமே சுயமாக சிந்தித்து எமது விடுதலைக்காகப் பாடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் பெருமளவான பெண்கள் கலந்துகொண்டனர். (ம-5)

# கல்வி நிர்வாக அமைப்பில் மாற்றம் கொண்டுவர உத்தேசம்

கொழும்பு,ஜூன்22

மனிதவள, மேம்பாடு, முன்னேற்றம், கலாசார அமைச்சு, கல்வி நிர்வாக அமைப்பில் மாற்றங்களை கொண்டுவர உள்ளது.

மாற்றங்கள் தொடர்பாக கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள வலயக் கல்வி அமைப்பை முற்றாக நிறுத்திவிடவும் அதற்குப் பதிலாக பகுதி வாரியான கல்வி அலுவலகங்களை அறிமுகப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாவட்ட கல்வி அதிகாரிமுறை மீண்டும் அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)


**லஷ்மி சினிமா** இணுவில்

**வில்லன்** அஜித்குமார், மீனா, கிரண் நடித்த (ரீஸ்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (ப.நே.) (19378)

**விற்பனைக்கு**

35 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்ட புதிய கோழிக்கூடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: கு.ராசன்,
35, இலந்தக்குளம் வீதி,
கொழும்புத்துறை.
T.P.0777 - 489537
(19381)

**நிறைஞ்சனாஸ்**

விஜயகாந்த், சௌந்தர்யா, செந்தில், கவுண்டமணி நடித்த **சொக்கத்தங்கம்** (ரீஸ்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8 க. இற்கு BEHIND ENEMY LINES

**நாகம்ஸ்** சுன்னாகம்

பிரகாஷ் ராஜ், மீனா, ரகுவரன் நடித்த "**தயா**" (ரீஸ்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 ( பு.நே. )

**லிபேட்டி** அச்சுவேலி



STUDENT No 1 (ரீஸ்ஸ்)

THE SCORPION KING (ரீஸ்ஸ்)

(சண்டைப்படம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.

K.S.ரவிக்குமாரின்



சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்

**யாழ் நகர் மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் சமய கலாசாரப் போட்டிகள்**

மேற்படி எமது கழகத்தினால் நடத்தப்படும் போட்டிகள் இன்று (22.06.2003) ஞாயிறு காலை 9.30மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெறுகின்றன. அத்துடன் தைத்த ஆடைகளும் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Rtr ச. பிரதீபா
செயலாளர்
(சி-28506)


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருஷம் ஆனித் திங்கள் 9ஆம் நாள் (23.06.2003) திங்கட்கிழமை காலை 12 மணிமுதல் 2 மணி வரையுள்ள (பகலுப நேரம்) ரேவதி நட்சத்திரமும் மீனராசியும் கன்னி லக்கினமும் அமைந்த சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பவானி**
அவர்களுக்கும்

மாலிசந்திப் பிள்ளையார் துணைகொண்டு அவ் ஆலயத்தில் திருமணத்திருமாங்கல்ய தாரணம் செய்ய இறைவன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி அருணாசலம் நாகதேவி
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

திரு. திருமதி இராசா ஜெகதேவி
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

இரு வீட்டார் அழைப்பு

(சி-28507)

## இரு மீனவரை காணவில்லை என முறைப்பாடு

கொழும்பு,ஜூன்22

வெலிகந்தவுக்கு மூன்று கிலோ மீற்றர் கிழக்கே நாமலகமவில் இருந்து கடந்த வியாழக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்.டி.பண்டார(வயது 16) எஸ். ஏ.விஜயசிறி ஆகியோரே காணாமற் போயுள்ளவர்களாவர். (ம-3)

## இடைக்கால நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் சட்ட ஒழுங்கைப் பேணுதல், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் அரசியல் படுகொலைகள் ஆகியன தொடர்பாகவும் இருவரும் கருத்து பரிமாறிக்கொண்டனர்.

ஆயுதங்களை ஒப்படைத்த தமிழ்க் குழுக்களின் தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்தும் இச் சந்திப்பில் பேசப்பட்டது.

நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீர் குலைந்து வருவது சம்பந்தமாக இரு தலைவர்களும் நீண்டநேரமாக கலந்துரையாடினர். மக்களின் நன்மை கருதி இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று இருவரும் உடன்பாடு கண்டனர்.

தற்போதுள்ள நிலைமையை மீளாய்வு செய்வதற்கும் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சட்டத்துறை அதிகாரிகளையும், பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதிகளையும் குறைந்தது மாதத்தில் ஒருதடவையாவது இருவரில் ஒருவர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்றும் அவர்கள் உடன்பட்டுள்ளனர் - என்றுள்ளது. (ம-3-5)

## பொங்குதமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்கள், பேச்சுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அதற்கு முன்னதாக பாடசாலைகள் மற்றும் பொதுநிறுவனங்களை சிவப்பு மஞ்சள் கொடிகள், மற்றும் மாவிலை, தோரணம், வாழை என்பவற்றைக்கொண்டு அலங்கரிப்பதெனவும், வீதிகள் பதாகைகள் கட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றும் நேற்றுமுன்தினமும் தென்மராட்சி, வடமராட்சி. தீவகம், யாழ்ப்பாணம். மருதனார்மடம் பகுதிகளில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடலில் இது தீர்மானிக்கப்பட்டது.

மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுவரும் பொங்கு தமிழ் இறுதி நிகழ்வுக்காக மக்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வு நடைபெறும் இடத்தில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் நிறுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் வசதி கருதி இம்முறை பல்கலைக்கழக மைதானத்தின் உள்ளேயே குடிதண்ணீர், குளிர்பான வசதிகள், சிற்றுண்டி வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருகின்றது - என்றுள்ளது. (ம-3)

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானக்குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸன், ஆலோசகர் எரிக் சொல்கெய்ம் ஆகியோர் கொண்ட குழு வன்னி செல்லும் இடைநிறுத்தப்பட்ட பேச்சை மீள ஆரம்பிப்பது தொடர்பாக புலிகளின் பிரதிநிதிகளுடன் அக்குழு பேச்சு நடத்தும் - என்றார் அவர். (ம-3)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுவ வீரனின் ஆயுதம் கீழேவிழ, அதையும் எடுத்துக்கொண்டு இரண்டு முறை மாவீரர் துயிலும் இல்லத்தை வெளிப்புறத்தால் சுற்றிவிட்டுச் சென்றனர்.

இவர்களது இத்தகைய செயற்பாடானது பயமுறுத்தும் வகையிலும் அவமானப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

கடந்த சில நாள்களாக இவ்வகையிலான வேண்டுமென்றே செய்யப்படுகின்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. தெருக்களிலும் சாலைகளிலும், அச்சுறுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இவ்வகையான ரோந்துகள், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாகவும், மீறும் வகையிலும் உள்ளன - என்றுள்ளது. (ம-3)

# பாதுகாப்பான நாடுகளில் இலங்கையும் ஒன்று

## பிரிட்டன் அறிவிப்பு

உலகில் பாதுகாப்பான நாடுகள் வரிசையில் இலங்கையையும் சேர்த்துள்ளதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் இருந்து பிரிட்டனுக்கு வந்தவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்களின் அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை நிராகரிப்பதென பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

இலங்கையில் உள்ள மக்கள் தமது நாட்டில் பாதுகாப்பாக வாழ முடியும் என்ற கருத்தில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 25 சதவீதமான இலங்கையருக்கே பிரிட்டனில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிரிட்டனுக்குள் நுழைந்து அகதி அந்தஸ்து கோரிய 4ஆயிரத்து 980பேரில் 3ஆயிரத்து 150 பேர் இலங்கையராவர்.

பாதுகாப்பான நாடுகள் வரிசையில் பங்களாதேஷ், பொலிவியா, பிரேஸில், ஈகுவடோர், தென்னாபிரிக்கா, உக்ரைன் ஆகியவற்றுடன் இலங்கையையும் பிரிட்டன் சேர்த்துள்ளது.

இந்த நாடுகளில் உள்ளவர்கள் தற்சமயம் பொதுவாகவே பாதுகாப்பாக வாழ்ந்தவர்கள் என குடிவரவு அமைச்சர் பெவேர்லி கூகஷ் கூறியுள்ளார்.


**பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி**

★ எந்தப் பிரதேசத்திலும் தொடர்புகொள்ளக்கூடிய முறையில் மேசைத் தொலைபேசிகள் இணைப்புகளுடன் வழங்கப்படும்.
★ மேசைத் தொலைபேசிக்குரிய பில் கனக்ஷன் உடன் செய்து தரப்படும்.
★ கையடக்கத்தொலைபேசிக்குரிய அன்ரனாக்களும் பொருத்தி தரப்படும்.
★ சகல கையடக்கத்தொலைபேசிகளும் உடன் லொக் உடைத்து தரப்படும்.

உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்

உத்தரவாதம் உண்டு!

IDD அழைப்புகளுக்கு ஒரு நிமிடம் 25/=

எமது பாவனையாளர் கவனத்துக்கு 071 உடன் 2 ஐ சேர்த்து (0712) அழுத்தவும்.

எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்:

✪ விஜய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 071-2399113
✪ குட்டி, பண்டத்தரிப்பு 071-2399208
✪ திருப்பதி தொலைத் தொடர்பு நிலையம் மானிப்பாய் 0777-722914 070-213352 021-5940 021-5732
✪ வ.அரவிந்தன், சுழிபுரம், 0777-550949
✪ சன் தொலைத் தொடர்பு நிலையம், திக்கரை, காரைநகர். 070-213190 071-2299264
✪ பவர் தொலைத் தொடர்பு நிலையம், நெடுந்தீவு 071-2381192 071-2381187
✪ சொலெக்ஸ் ஒப்றிகல், 100, கண்டி வீதி, சாவகச்சேரி. 0777-855328
✪ ஆர்.தயாகரம், வட்டுக்கோட்டை 0777-244524
✪ ஆர்.ஆனந்தன், கலைவாணி வீதி, சித்தன்கேணி. 0712-297314
✪ சுதன் தொலைத்தொடர்பு நிலையம், மிருசுவில். 0777-584896
✪ இந்திரா தொலைத்தொடர்பு நிலையம், நயினாதீவு, அனலைதீவு. 071-2793224

மேலும் முகவர்கள் தேவைப்படுகின்றனர்.
எமதுதொடர்புகளுக்கு: POWER CELLULAR, 1st Fleat,185,KASTHURIYAR ROAD, JAFFNA (வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)
0712-39920 0777-242416
FAX-071-2381125
E.mail-Power @ c/.LK



**அருள் கொமினிக்கேஷன்**

உங்கள் தேவையே எங்கள் சேவை!
✪ வெளிநாட்டு அழைப்புகள்...... 10/=
✪ தொலைத்தொடர்பு நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கான வெளிநாட்டு இணைப்பு அழைப்புகள 7/=
✪ வெளிநாட்டு அழைப்பு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் ஒரு நிமிடம் இலவசம்.

பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்
☎ 35356
(19357)



**த சாரிகா லேனர்ஸ்**

சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கு சிறந்த முறையில் முழுப்பயிற்சி அளித்து சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் (இலங்கையில் பல பாகங்களிலும் சிறந்த சாரதிகளை உருவாக்கிய) த சாரிகா லேனர்ஸ் நிறுவனத்தினர் தமது யாழ்ப்பாண கிளையை 20.06.2003 வெள்ளிக்கிழமைமுதல் ஆரம்பித்திருக்கின்றார்கள் என்பதை யாழ் மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

பஸ் நிலையம் முன்பாக
முனியப்பர் கோயில் வீதி,
இல.38, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்,
இல.108, புதிய பஸ்நிலையம்,
வவுனியா.
T.P.: 024 23515
(19348)



விஞ்ஞான, கணித, கலைத்துறை மாணவர்களே!
நீங்களும் கணக்காளராக, முகாமைக் கணக்காளராக வேண்டுமா?
இதோ aat கற்கை நெறியுடன் இணைந்திடுங்கள்

OUR SPECIAL OFFER FOR A/L 2003 STUDENTS

100% FREE
அடிப்படைத் தகைமை
O/L 6 Passes OR A/L 2 Passes

தொடர்புகளுக்கு: Career.Com Institute No 79, Main St, Jaffna.
அலுவல நேரம் : தினமும் 10.00 a.m. - 2.00p.m.
2003 Dec பரீட்சைக்குரிய விரிவுரைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
(சி-28502)



**யசோ மோட்டோர்ஸ்**
வாடிக்கையாளர்களது கவனத்துக்கு!

அன்பார்ந்த எமது வாடிக்கையாளர்களே!
இன்று (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இருந்து

**T.V.S. கம்பனி உறுப்பினர்கள்**

எமது ஸ்தாபனத்துக்கு வருகைதருகின்றார்கள்.
ஆகவே, T.V.S. SCOOTY PEP மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் அனைவரும் தங்களது மோட்டார் சைக்கிள்களுடன் இன்று காலை 9.00 மணிக்கு (புதியநேரம்) எமது ஸ்தாபனத்துக்கு தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

YASO MOTORS
163,STANLEY ROAD,
JAFFNA.
☎ 212 2544
(சி-28603)


# ஓராண்டு அக வணக்கம்



கற்கள் இன்னமும்
மேலெழுகின்றன...
இடைவெளியுள்
எம் தேச உணர்வை நிரப்பி
காற்றுப்போக முடியாமல்
அசுர பலத்தை உள்வாங்கி
பெருஞ் சுவருக்காய்
இன்னமும் கற்கள்
மேலெழுகின்றன...
எங்கள் குழந்தைகள்
இதில் நடைபயில்வர்...
ஒவ்வொரு
பாத அடியுள்ளும்
எங்கள் தாயகத்தை
நினைவுகூர்வர்
வேரின் வாசம்
அவர்களின் சுவாசமாய்...

எங்கள் தோழா,
கருணாநிதி
எல்லாமும் நாங்கள்
நினைத்தபடி...
எல்லாப் பணிகளும்
இறக்கைகளை
இரட்டிப்பாக்கிவிட்டன...
இருந்தும் ஓர் இடைவெளி
அண்ட வெளிபோல்
எந்த இயற்கையும்
ஈடுசெய்ய முடியாமல்...
என்ன செய்கிறோம்
ஓராண்டு, ஒரு நாள்போல்...
உன் கைகளால்
பெருஞ்சுவருக்காய்
நீ வைத்த கற்களிலிருந்து
உன்னை மீட்டுகிறோம்...

**17.08.1960-22.06.2002**

எங்கள் அன்புத் தோழன்

நாட்டுப் பற்றாளர் **மார்க்கண்டு கருணாநிதி**

(பரீட்சைக் குழுப் பொறுப்பாளர், சுவிற்சர்லாந்து)

கல்விச் சேவை பரீட்சைக் குழுப் பொறுப்பாளராய் இருந்து, சுவிஸ் வாழ் புலம் பெயர் தமிழ்ச் சிறார்களின் தாய்மொழிக் கல்வி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய நாட்டுப் பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதி அவர்களின் தேசப் பற்றை நினைவு கூர்ந்து எங்கள் அக வணக்கத்தைச் செலுத்தி நிற்கிறோம்..

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச்சேவை - சுவிற்சர்லாந்து
World Tamil Co-ordinating Committee Education Service - Switzerland
Postfach 2311, 8031 Zürich, Tel. 01/440 20 55, Fax 01/440 20 56, E-mail: wtcc.es@freesurf.ch

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள, அவர்களது பணிமனையில், 22.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.